# அத்தியாயம் 8

## நிதியியல்துறை அபிவிருத்திகளு
## முறைமை உறுதித்தன்மையும்








### 8.1 பொதுநோக்கு

**பொருளாதார செயற்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கான இயலளவை வலுப்படுத்தி நிதியியல் துறை மேலும் விரிவடைந்து வலுப்பெற்றுக் காணப்பட்டது.** நிதியியல்துறை நிறுவனங்கள் முக்கிய நிதியியல் குறிகாட்டிகள் மற்றும் வழங்கப்பட்ட பலதரப்பட்ட பணிகள், பொருட்கள் ஆகிய நியதிகளிலான தமது வலுவான செயலாற்றத்தினை 2006இல் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டன. இவ்வாண்டு காலப்பகுதியில் குறிப்பாக வேளாண்மைத்துறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதிக் கிடைப்பனவினை விரிவாக்குவதற்கான பல்வேறு கொள்கை உத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு புதிய சட்டவாக்கங்களினை அறிமுகப்படுத்தல், மேற்பார்வை ஆற்றல்களை அதிகரிப்பதற்கான விரிவுபடுத்தல் மற்றும் முன்மதிகரமான ஒழுங்குவிதிகள் முறைமையிலான இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான அதிசிறந்த தொழிநுட்பத்தினை அறிமுகப்படுத்தல் போன்றவற்றின் மூலம் நிதியியல் உட்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டது.

**மத்திய வங்கியானது அவசியமான சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் மறுசீரமைப்பினை இயலச் செய்வதற்கான சட்டவாக்கங்களிலான திருத்தங்களின் மூலமும் வங்கி மற்றும் வங்கிசாரா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை தொடர்ந்தும் வலுப்படுத்தியது.** மத்திய வங்கி சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தலையும் மேற்பார்வையினையும் 2006இல் வலுப்படுத்தியது. கொடுகடனிலான விரைந்த வளர்ச்சியினைக் கருத்திற் கொண்டு இவ்வாண்டு காலத்தில் பல்வேறு முன்மதிகரமான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மூலதன போதுமையின் சமாந்தரக் கணிப்பீடுகளுக்கான வழிகாட்டல்களை வங்கிகளுக்கு வழங்கியதன் மூலம் பாசல் II என்ற மூலதனப் போதுமை கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலுக்குள்ளான தயார்படுத்தலுக்கு வசதியளிக்கப்பட்டது. நிதியியல் முறைமையின் நேர்மை மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் போன்றவற்றால் உருவாக்கப்படக்கூடிய இடர்நேர்வுகளை இனங்கண்டு அத்தகைய புதிதாக தோற்றம் பெற்றுவரும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்காக விரிவான சட்டவாக்கங்களை இலங்கை அறிமுகம் செய்தது. நாணயவிதிச் சட்டத்திலும் வங்கித்தொழில் சட்டத்திலும் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் வினைத்திறனையும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினையும் மேம்படுத்துவதற்காக மத்திய வங்கி 2006இல் மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.** நாடாளாவிய ரீதியில் சில்லறை மற்றும் குறைந்த பெறுமதியுடைய கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்துவதற்காக காசோலை பிரதிமைப்படுத்தலும் மற்றும் சுற்றோட்டக்குறைப்புக்குமான முறைமை 2006இல் அறிமுகப்படுத்தப்பட்டது. லங்கா செட்டில் மற்றும் லங்கா கிளியர் முறைமைகளின் பங்குபற்றுனர்கள் உறுதி வாய்ந்த வியாபார தொடர்ச்சித்திட்டங்களை கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக வியாபார தொடர்ச்சித் திட்டங்களுக்கான ஆகக்குறைந்த நியமங்களை குறிப்பிட்டு மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களை வழங்கியது. நாட்டிற்கான தேசிய கொடுப்பனவுக் கொள்கையினை உருவாக்குவதற்கும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் உட்கட்டமைப்பின் நவீனமயப்படுத்தலை முன்னெடுப்பதற்கும் வசதியளிப்பதற்காக அனைத்து முக்கிய தரப்பினரது பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக தேசிய கொடுப்பனவுகள் சபையொன்று உருவாக்கப்பட்டது. கொடுப்பனவுக் கருவிகள் தொடர்பான சட்டரீதியற்ற மற்றும் ஆபத்தான நடைமுறைகளை தடுப்பதற்கானதொரு சட்டத்தின் அறிமுகத்தினூடாக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை மேலும் வலுப்படுத்தப்பட்டது.

**முக்கிய நிதியியல் நிறுவனங்கள் மற்றும் முக்கிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகளது தொடர்ச்சியான விரிவாக்கம் மற்றும் மேம்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் போன்றவற்றினைத் தொடர்ந்து நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு 2006இல் மேலும் வலுவடைந்தது.** நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிலான மேம்பாடானது பல்வேறு முக்கிய நிதியியல் செயலாற்றுகை குறிகாட்டிகளில் பிரதிபலிக்கப்பட்டுள்ள போதிலும் நிதியியல் முறைமையை பாதிப்படையச் செய்யக்கூடிய உள்ளார்ந்த மூலங்களாக பணவீக்க அழுத்தங்களின் உருவாக்கம், கொடுகடனின் தரத்தின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்கின்ற உயர்ந்த கொடுகடன் வளர்ச்சி, உயர்ந்து செல்லும் படுகடன் பணிக்கொடுப்பனவு சுமை மற்றும் உயர்ந்த எண்ணெய் விலைகளின் காரணமாக விரிவடைந்து செல்லும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை போன்றன விளங்குகின்றன. ஆயினும், பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக நாணயக்கொள்கையினை படிப்படியான இறுக்கமாக்கல், உயர்ந்த கொடுகடன் வளர்ச்சியினைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிகமான முன்மதிகரமான வழிமுறைகள், அரசாங்கத்தின் இறைத்திரட்சி முயற்சி மற்றும் "வழிகாட்டல்: 2007இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல்துறை கொள்கையில்" குறிப்பிட்டுள்ளதைப் போன்று முன்மதிகரமான ஒழுங்குவிதிகளிலான மேம்பாடுகள் போன்றன இத்தகைய இடர்நேர்வுகளது பாதகமான தாக்கங்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் துணைபுரியும்.

**அட்டவணை 8.1 நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்**

| | 2005 (a) | | 2006 (b) | |
|---|---|---|---|---|
| | ரூ.பில் | மொத்த சதவீதப் பங்கு % | ரூ.பில் | மொத்த சதவீதப் பங்கு % |
| **வங்கித்தொழில்துறை** | **2,208.4** | **70.1** | **2,625.8** | **70.8** |
| மத்திய வங்கி | 440.6 | 14.0 | 495.1 | 13.3 |
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்(இ) | 1,448.9 | 46.0 | 1,774.3 | 47.9 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 318.9 | 10.1 | 356.4 | 9.6 |
| **வங்கியல்லா வைப்புக்களை ஏற்கும் நிதியியல் நிறுவனங்கள்** | **119.2** | 3.8 | **145.8** | **3.9** |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 87.5 | 2.8 | 113.1 | 3.0 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் | 26.5 | 0.8 | 27.8 | 0.8 |
| சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 5.2 | 0.2 | 4.9 | 0.1 |
| **சிறப்பியல்பு வாய்ந்த ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **129.3** | **4.1** | **155.8** | **4.2** |
| முதன்மை வணிகர்கள் | 45.9 | 1.5 | 50.9 | 1.4 |
| குத்தகையிடல் கம்பனிகள் | 53.3 | 1.7 | 66.8 | 1.9 |
| வணிக வங்கிகள் | 24.0 | 0.8 | 31.3 | 0.8 |
| நம்பிக்கைக் கூறுகள் | 4.6 | 0.1 | 5.4 | 0.1 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | 1.5 | 0.0 | 1.4 | 0.0 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **693.8** | **22.0** | **778.8** | **21.0** |
| ஊழியர் சேம நிதியம் | 424.0 | 13.5 | 492.1 | 13.3 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 58.6 | 1.9 | 66.8 | 1.8 |
| தனியார் ஊழியர் சேமநிதியம் | 106.2 | 3.4 | 112.6 | 3.0 |
| காப்புறுதிக் கம்பனிகள் | 105.0 | 3.3 | 107.3 | 2.9 |
| **மொத்தம்** | **3,150.7** | **100.0** | **3,706.2** | **100.0** |

(அ) திருத்தயமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் இரண்டினதும் ஒன்று திரட்டப்பட்ட சொத்துக்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## 8.2 நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகள்

**நிதியியல் நிறுவனங்களது செயற்பாடுகள் 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேலும் விரிவடைந்தன.** நிதியியல் நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள் 18 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.3,706 பில்லியனை அடைந்தன. இது மொ.உ.உற்பத்தியின் 1.3 மடங்காகும். நிதியியல்முறைமையின் மொத்தச் சொத்துக்களில் 57.4 சதவீதத்திற்கு வகை கூறுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் நிதியியல் துறையில் தொடர்ந்தும் முன்னணி நிலையை வகித்தன. நிதியியல்முறைமையின் சொத்துக்களது வளர்ச்சியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 58.6 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தன.

### இலங்கை மத்திய வங்கி

**தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புடன் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 2006இல் 12.4 சதவீதத்தினால் அதிகரித்தன.** தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பிற்கு அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் கொள்வனவு செய்யப்பட்டமை முக்கிய காரணமாகவிருந்தது.

**அதிகரித்த திறைசேரி உண்டியல்கள் உடைமை மற்றும் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களின் அதிகரிப்பு என்பவற்றுடன் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள் அதிகரித்தன.** வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகளின் காரணமாக எழுந்த ரூபாத் திரவத்தன்மையின் பணநிரம்பல் மீதான அதன் விரிவாக்கத் தாக்கத்தினைக் குறைப்பதற்காக வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகள் மூலமாக குறிப்பிடத்தக்களவான தொகை திரவத்தன்மையின்மையினை மத்திய வங்கி இல்லாமல் செய்தது. எனினும், வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகள் 2005இன் இறுதியிலான மட்டத்துடன் ஒப்பிடுமிடத்து 2006 இறுதியில் ரூ.30 பில்லியனால் உயர்வாக காணப்பட்டு தேறிய உள்நாட்டு சொத்துக்களின் அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றன.

**பொறுப்புக்கள் பக்கத்தில் மத்திய வங்கியின் மொத்த நாணய வெளியீடு 18.7 சதவீதத்தினால் (ரூ.24.8 பில்லியன்) அதிகரித்து நாணயத்திற்கான அதிகரித்த கொடுக்கல் வாங்கலுக்கான கேள்வியினைப் பிரதிபலித்தது.** வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களிலான வளர்ச்சியுடன் வர்த்தக வங்கிகளினால் நியதி ஒதுக்கு தேவைகளுக்காக மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் வைப்புக்கள் 26 சதவீதத்தினால் (ரூ.17 பில்லியன்) அதிகரித்தன.

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

**சொத்துக்களின் வளர்ச்சி, விநியோக வழிகளின் விரிவாக்கம், இடர்நேர்வு முகாமையிலான மேம்பாடு, இடர்நேர்வினை உள்ளீர்க்கும் இயலளவு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு போன்ற நியதிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் செயலாற்றம் 2006இல் மேலும் மேம்பாடடைந்தது.** உரிமம் பெற்ற 23 வர்த்தக வங்கிகளும் 1,530 கிளைகள் மற்றும் 1,986 ஏனைய பணி நிலையங்களைக் கொண்டதொரு வலையமைப்பினூடாக தொழிற்பட்டன. இந்த வலையமைப்பிற்கு அனுசரணையாக 1,127 தன்னியக்க கூற்றுப்பொறிகள், விற்பனை நிலையங்களில் 8,753 இலத்திரனியல் நிதி மாற்றல் வசதிகள் என்பன வங்கித்தொழில் பணிகளின் சிறந்த கிடைப்பனவுகளுக்கு பங்களிப்புச் செய்தன. பாவனையிலுள்ள கடன் அட்டைகளது மொத்த எண்ணிக்கை 2005இன் 637,326 இலிருந்து 2006இல் 811,289 இற்கு அதிகரித்தது. புதுமை வாய்ந்த வங்கித்தொழில் பணிகளை வழங்குவதற்காக தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழிநுட்பங்களிலான அபிவிருத்திகளினை அநேகமான வங்கிகள் பயன்படுத்தியதுடன் 16 வங்கிகள் முழுஅளவிலான இணைய வங்கித்தொழில் வசதிகளை வழங்கின. நிதியியல் மற்றும் கொடுப்பனவுடன் தொடர்புடைய பணிகளை விநியோகிப்பதற்கு அஞ்சல் வலையமைப்பு மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் போன்ற புதுமை வாய்ந்த பணி விநியோக பொறிமுறைகளது பாவனையை இவ்வாண்டில் காணக்கூடியதாகவிருந்தது.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை உள்ளடக்கிய ஒழுங்குமுறைப்படுத்துதல் கட்டமைப்பானது இடர்நேர்வு முகாமைத்துவம், சிறந்த சந்தை ஒழுக்கப்பாடு போன்றவற்றை ஊக்குவிப்பதற்கும் இடர்நேர்வுகளின் உள்ளார்ந்த மூலங்களை மட்டுப்படுத்துவதற்குமாக மேலும் வலுப்படுத்தி மேம்படுத்தப்பட்டது.** வங்கித்தொழில்துறையின் ஆற்றலை உயர்த்துவதற்காக சந்தை இடர்நேர்வு, ஏற்பாட்டு தேவைப்பாடுகள், பாசல் II கட்டமைப்புக்குட்பட்ட மூலதனப் போதுமைத்தன்மை போன்றவற்றை உள்ளடக்கிய பல்வேறு முன்மதிகரமான வழிமுறைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. இது தொடர்பில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் குறிப்பாக சிறப்புக் கடன் மீளறவிடல் உத்திகளினூடாக கொடுகடன் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு விடயங்களிலும், புதிய மூலதன உட்பாய்ச்சல், பேரழிவு மீண்டெழுகை நிலையங்களது உருவாக்கம், வியாபார தொடர்ச்சித் திட்டங்களது உருவாக்கம், மேம்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ நுட்பங்களை பயன்படுத்துவதிலான அலுவலர்களது தொழிநுட்பத் திறமைகளை மேம்படுத்தல் போன்றவற்றினூடாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன.

### அட்டவணை 8.2 வங்கிகள் வங்கிக் கிளைகளின் பரம்பல்

| வகை | 2005 (அ) முடிவில் | 2006 (ஆ) முடிவில் |
|---|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| **i. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **22** | **23** |
| உள்நாட்டு வங்கிகள் | 11 | 11 |
| வெளிநாட்டு வங்கிகள் | 11 | 12 |
| **ii. வர்த்தக வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்கள்** | **3,112** | **3,516** |
| கிளைகள் (இ) | 1,417 | 1,530 |
| உள்நாட்டு வங்கிக் கிளைகள் | 1,380 | 1,491 |
| முதன்மைக்கிளைகள் | 1,106 | 1,166 |
| கச்சேரிக் கிளைகள் | 22 | 22 |
| விரிவாக்க/ கொடுப்பனவு அலுவலகங்கள்/ பணிக்கரும பீடங்கள் | 241 | 290 |
| கடல் கடந்த கிளைகள் | 11 | 13 |
| வெளிநாட்டு வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும் | 37 | 39 |
| கிளைகள் (ஈ) | 30 | 31 |
| ஏனைய பணி நிலையங்கள் | 7 | 8 |
| அடகுவைக்கும் நிலையங்கள் | 194 | 186 |
| மாணவர்களின் சேமிப்புப் பிரிவு | 1,501 | 1,800 |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | | |
| **i. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **14** | **14** |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 6 | 6 |
| தேசிய சேமிப்பு வங்கி | 1 | 1 |
| நீண்டகால கடன்வழங்கும் நிறுவனங்கள் | 2 | 2 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 3 | 2 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 2 | 3 |
| **ii. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும்** | **404** | 415 |
| கிளைகள் | 369 | 376 |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 197 | 201 |
| தேசிய சேமிப்பு வங்கி | 114 | 114 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 11 | 11 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 27 | 28 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 20 | 22 |
| ஏனைய பணி நிலையங்கள் | 35 | 39 |
| **அனைத்து வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும்** | 3,516 | 3,931 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) நகை அடகு பிடிக்கும் நிலையங்கள் மற்றும் மாணவர்கள் சேமிப்பு அலகுகள் நீங்கலாக தலைமை அலுவலகங்கள் உட்பட
(ஈ) விரிவாக்க அலுவலகங்களையும் துணை அலுவலகங்களையும் உள்ளடக்கும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கட்டமைப்பிலான அபிவிருத்திகள்:** பொருளாதாரச் செயற்பாடுகளின் தொடர்ச்சியான விரிவாக்கம் மற்றும் உண்மை நியதிகளிலான கவர்ச்சிகரமான கடன் வழங்கல் வீதங்கள் என்பன காரணமாக கொடுகடனின் உயர்ந்த விரிவாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள் மேலும் அதிகரித்தன. வங்கித்தொழில் துறையினுள் உள்நாட்டு தனியார் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் சொத்துக்களில் 22.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த அதேவேளை உரிமம்பெற்ற அரசுடமை வர்த்தக வங்கிகள் 15.3 சதவீத சொத்து வளர்ச்சியை பதிவு செய்தன.சொத்துக்களின் மொத்த வளர்ச்சியில் உரிமம்பெற்ற உள்நாட்டு தனியார் வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற அரசுடமை வர்த்தக வங்கிகள் என்பன முறையே 45.3 சதவீத மற்றும் 30.6 சதவீத பங்களிப்பைச் செய்தன. இதேவேளை, உரிமம்பெற்ற வெளிநாட்டு வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் 24.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. சொத்துக்களின் வளர்ச்சியில் பல்வேறு மூலங்களது பங்களிப்புக்களின் நியதிகளில் கடன்களும் முற்பணங்களும் 2005இன் 50 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2006இல் ஏறத்தாள 70 சதவீதத்திற்கு வகை கூறின.

**கடன் மற்றும் முற்பணங்களின் மொத்த வளர்ச்சியானது முக்கியமாக அரச வங்கிகளதும் உரிமம்பெற்ற உள்நாட்டு தனியார் வர்த்தக**

**அட்டவணை 8.3** **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் (அ)**

ரூபா மில்லியன்

| | 2005 முடிவில் | 2006 முடிவில் | மாற்றம் 2005 தொகை | 2005 % | 2006 தொகை | 2006 % |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | |
| திரவச் சொத்துக்கள் | 333,877 | 333,536 | 58,121 | 21.1 | (341) | (0.1) |
| கையிலுள்ள பணம் | 18,366 | 22,220 | 2,127 | 13.1 | 3,854 | 21.0 |
| மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை | 69,880 | 87,023 | 15,216 | 27.8 | 17,143 | 24.5 |
| வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்கள் | 137,020 | 115,126 | 18,343 | 15.5 | (21,894) | (16.0) |
| திறைசேரி உண்டியல்கள் | 39,562 | 49,195 | 1,328 | 3.5 | 9,633 | 24.3 |
| திறைசேரி முறிகள் (ஆ)(இ) | 53,099 | 43,203 | 21,170 | 66.3 | (9,896) | (18.6) |
| வர்த்தக உண்டியல்கள் | 15,950 | 16,769 | (63) | (0.4) | 819 | 5.1 |
| கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் | 778,088 | 1,006,571 | 143,437 | 22.6 | 228,484 | 29.4 |
| கடன்கள் | 612,516 | 785,276 | 112,913 | 22.6 | 172,760 | 28.2 |
| மேலதிகப்பற்றுக்கள் | 165,572 | 221,295 | 30,524 | 22.6 | 55,724 | 33.7 |
| நிலையான மற்றும் ஏனைய சொத்துக்கள்(இ) | 162,018 | 173,072 | 22,892 | 16.5 | 11,054 | 6.8 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மூலதனக் கணக்குகள் | 110,928 | 136,835 | 33,708 | 43.7 | 25,906 | 23.4 |
| மொத்த வைப்புக்கள் | 1,002,381 | 1,181,977 | 159,449 | 18.9 | 179,595 | 17.9 |
| கேள்வி வைப்புக்கள் | 145,082 | 161,137 | 34,181 | 30.8 | 16,055 | 11.1 |
| தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | 857,300 | 1,020,840 | 125,268 | 17.1 | 163,540 | 19.1 |
| கடன்பாடுகள் | 71,757 | 127,429 | 30,229 | 72.8 | 55,672 | 77.6 |
| உள்நாட்டுக் கடன்பாடுகள் | 60,246 | 104,694 | 26,300 | 77.5 | 44,448 | 73.8 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 11,511 | 22,735 | 3,929 | 51.8 | 11,224 | 97.5 |
| ஏனைய பொறுப்புக்கள் | 261,155 | 325,381 | 61,416 | 30.7 | 64,226 | 24.6 |
| **மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **1,446,222** | **1,771,621** | **284,802** | **24.5** | **325,399** | **22.5** |

(அ) 2005 ஒகத்தில் நடைமுறைக்கு வந்த வகையில் என்.டீ.பி வங்கியுடன் இணைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியுடைய சொத்துக்கள் / பொறுப்புக்கள் உள்ளடங்குகிறது.

(ஆ) 1998 மே 18 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் திறைசேரி முறிகள் வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்களின் ஓர் பகுதியாகக் கருதப்படுகின்றது.

(இ) அரசினால் இரண்டு அரச வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா. 19,392.6 மில்லியன் பெறுமதியான மீள்கட்டமைப்பு முறிகள் 2006 ஒத்தோபரில் அவற்றின் முதிர்வுடன் திறைசேரி முறிகளாக மாற்றிமைக்கப்பட்டன. ஏனைய சொத்துகளின் கீழ் காணப்பட்ட இந்தத் தொகை 2006 ஒத்தோபரிலிருந்து திறைசேரி முறிகளுள் உள்ளடக்கப்படுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வங்கிகளதும் கொடுகடன் விரிவாக்கத்தினால் ஏற்பட்டதாகும்.** கடன்கள் மற்றும் முற்பணங்களின் 31 சதவீத வளர்ச்சிக்கு உரிமம்பெற்ற அரசுடமை வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற உள்நாட்டு தனியார் வர்த்தக வங்கிகள் என்பன முறையே 49 சதவீதம் 43 சதவீதம் பங்களிப்புச் செய்துள்ளன. உரிமம்பெற்ற அரசுடமை வங்கிகள் கடன் மற்றும் முற்பணங்களில் அதியுயர் வளர்ச்சியான 44 சதவீதத்தினையும் அதனைத் தொடர்ந்து உரிமம்பெற்ற வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் 25 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்தன.

**அதிகரித்த வட்டி எல்லைகள், மேம்பட்ட செலவு வினைத்திறமை மற்றும் அந்நிய செலாவணி வருவாயிலான அதிகரிப்பு போன்றன உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் துறையின் இலாபங்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன.** தேறிய வட்டி வருவாய் 2005இன் 2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2006இல் 17 சதவீதத்தினால் அதிகரித்தமையினால் வரிக்கு முந்திய இலாபங்கள் 34 சதவீதத்தினால் ரூ.30 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்தன. உரிமம்பெற்ற உள்நாட்டு தனியார் வங்கிகள் இத்துறையின் இலாப வளர்ச்சியில் 58 சதவீத பங்களிப்புச் செய்தன. சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய் ஆகிய நியதிகளில் இலாபத்தன்மையானது முன்னைய ஆண்டினை விட மேம்பாடடைந்து 2006 இறுதியில் முறையே 1.8 சதவீதம் மற்றும் 18.5 சதவீதமாக காணப்பட்டது.

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நிதி மூலங்களும் பயன்பாடுகளும்:** கடன் பெறுகைகளிலான அதிகரிப்பு மற்றும் வைப்புக்களிலான வீழ்ச்சி என்பன காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நிதியிடல் மூலங்கள் நகர்வொன்றை வெளிப்படுத்தியுள்ளன. கடன் பெறுகையினது பங்களிப்பு 2005இன் 7.8 சதவீதத்திலிருந்து 12.2 சதவீதத்திற்கு அதிகரித்தவேளை வைப்புக்களது பங்களிப்பு 2005இன் 74.4 சதவீதத்திலிருந்து 70.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது. 2006இல் மொத்த வைப்புக்களின் வளர்ச்சி 15.6 சதவீதமாகக் காணப்பட்டது. வைப்புக்களின் உயர்ந்த வளர்ச்சியானது பொருளாதார செயற்பாடுகளின் தொடர்ச்சியான விரிவாக்கத்தினால் அதிகரித்து குடியிருப்பாளர்களின் செலவிடத்தக்க வருவாய் மற்றும் முறைமையில் காணப்பட்ட திரவத்தன்மை போன்றவற்றினை பிரதிபலித்தது.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளத்தளத்தில் மூலதன நிதிகளின் பங்கு 2005 உடன் ஒப்பிடும்போது 2006இல் சிறிதளவு மேம்பாடடைந்தது.** இதன் விளைவாக, மொத்த மூலவளங்களில் கடன் பெறுகைகளினதும் மூலதன நிதியங்களினதும் பங்கு 2005இன் 15.5 சதவீதத்திலிருந்து 20.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், முக்கிய மூன்று நிதியிடல் மூலங்களில் கடன் பெறுகையானது ஒரு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**உயர்ந்த கொடுகடன் விரிவாக்கத்தினைப் பிரதிபலித்து, கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் அதிகரித்த மட்டத்திலான மூலவளப்பயன்பாட்டினை இவ்வாண்டில் காணக்கூடியதாகவிருந்தது.** வைப்புக்கள், மூலதனம், கடன்பெறுகைகள் மற்றும் ஏனைய மூலங்களினூடாக திரட்டப்பட்ட மொத்த மூலவளங்களில் ரூ.229.3 பில்லியன் கடன்கள் மற்றும் முற்பணங்களினால் உள்ளீர்க்கப்பட்டு இவ்வாண்டில் திரட்டப்பட்ட மொத்த மூலவளங்களில் ஏறத்தாள 70 சதவீதத்தினை பிரதிபலித்தன. மொத்த நிதியிடல் தளத்தில் கடன்களின் பங்கு 2005 இறுதியின் 34.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006 இறுதியில்

**வரைபடம் 8.1** **வர்த்தக வங்கியின் நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் (2006 இறுதியிலுள்ளவாறு)**




57.8 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் முதலீடுகளின் பங்கு அதே காலப்பகுதியில் 16 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**கொடுகடனின் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட பகிர்ந்தளிப்பானது தொடர்ந்து வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நுகர்வுச் செயற்பாடுகளினால் முதன்மை வகிக்கப்படுகின்றது.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தை உள்ளடக்கிய வர்த்தகச் செயற்பாடுகளுக்கான கொடுகடனின் பங்கு, அத்தகைய நோக்கங்களுக்கான கொடுகடனிலான 12.5 சதவீத வளர்ச்சிக்கும் மத்தியிலும், இவ்வாண்டில் 29.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, வீடமைப்பு மற்றும் கட்டடவாக்கம் மற்றும் நுகர்வு செயற்பாடுகளினால் உள்ளீர்த்துக் கொள்ளப்பட்ட கொடுகடனின் பங்கு 2006 இறுதியில் முறையே 16.2 சதவீதம் மற்றும் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்து ஒவ்வொன்றும் 41 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. நுகர்வு வகையினுள் பெருமளவான அதிகரிப்பிற்கு நுகர்வுப் பொருட்களின் கொள்வனவுக்கான கடன்கள் வகை கூறிய அதேவேளை வீடமைப்பு செயற்பாடுகளிற்கான கொடுகடனில் வதிவிட வீடமைப்புத்துறை பெரும்பங்கிற்கு பங்களிப்புச் செய்தது.

**அதிகரித்த செவிடத்தக்க வருவாய் மற்றும் வங்கிகளினால் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான ஊக்குவிப்புப் பொதிகள் போன்றவற்றின் பின்னணியில் கடன் அட்டை வியாபாரத்திலானதொரு அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.** கடன் அட்டை பணிகளினை வழங்குகின்ற வங்கிகளுக்கிடையேயான தீவிரமான போட்டிக்கு மத்தியிலும் பத்து வங்கிகளினாலும் வழங்கப்பட்ட கடன் அட்டைகளுடான கொடுகடன் 41 சதவீதத்தினால் ரூ.21.1 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்தக் கடன்பட்டியலில் கடன் அட்டையூடான கடன்களின் பங்கு 1.7 சதவீதமாக காணப்பட்டது. இந்தக் கடன் வழங்கல்களின் பிணையிடப்படாத தன்மையின் காரணமாக கடன் அட்டையூடான கடன்களுக்கான வட்டி வீதங்கள் 21-42 சதவீத வீச்சில் காணப்பட்டன. கடன் அட்டை வியாபாரத்தில் ஒரு விரைவான அதிகரிப்பு காணப்படுகின்ற போதிலும் குடித்தொகையிடையேயான கடன் அட்டைகளின் ஊடுருவல் மட்டம் பிராந்தியத்திலுள்ள அநேகமான நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இன்னமும் ஒப்பீட்டளவில் குறைவானதாகவே காணப்படுகின்றது. கடன் அட்டை கொடுக்கல் வாங்கல்கள் மீது 1 சதவீத வரியொன்று 2006 விதிக்கப்பட்டமை கடன் கொடுக்கல் வாங்கல்களில் சில தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.

**அரசாங்கத்தினால் வங்கிக் கொடுகடன் அதிகரித்தளவில் பயன்படுத்தப்பட்டமையினால் வர்த்தக வங்கிகளின் அரச துறைக்கான திரண்ட வெளிப்படுத்துகை அதிகரித்தது. வர்த்தக வங்கிகளின் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனும் அதிகரித்தது.** மேலதிகப் பற்று, அரச பிணையங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலான முதலீடுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழிற் பிரிவுகளினூடாக வழங்கப்பட்ட கொடுகடன் போன்ற வழிகளிலான அரசிற்கான தேறிய கொடுகடன் 2006 இறுதியில் ஏறத்தாள ரூ.88 பில்லியனால் ரூ.357 பில்லியனுக்கு அதிகரித்தது. இதேவேளை, வர்த்தக வங்கிகளிலுள்ள அரசாங்கத்தின் வைப்புக்கள் 2006இல் ரூ.6 பில்லியனினால் ரூ.33 பில்லியனுக்கு அதிகரித்தன. 2005இல் காணப்பட்ட போக்கினை நேர்மாற்றமடையச் செய்து அரசிற்கான தேறிய கொடுகடனின் அதிகரிப்பின் முக்கிய பங்கிற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் வகை கூறின. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தான அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் முக்கியமாக எண்ணெய் பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான கொடுகடனின் அதிகரிப்பின் காரணமாக 89 சதவீதத்தினால் ஏறத்தாள ரூ.31.6 பில்லியனுக்கு அதிகரித்தது.

**முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மேம்பட்ட ஆற்றலினை பிரதிபலித்து நிதியியல் உறுதிப்பாட்டுக் குறிகாட்டிகள் 2006இல் மேலும் மேம்பாடடைந்தன.** சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு மீதான வருவாய் போன்ற நியதிகளிலான இலாபத்தன்மையானது அதிகரித்த வட்டி எல்லை, செலவு

**அட்டவணை 8.4** **வர்த்தக வங்கிகளின் கடன் அட்டைத் தொழிற்பாடுகள்**

| துறை | 2005 (அ) | 2006 (ஆ) | % மாற்றம் |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட கடன் அட்டைகளின் | | | |
| மொத்த எண்ணிக்கை | 637,326 | 811,289 | 27.3 |
| உள்ளூர் | 73,243 | 61,982 | -15.4 |
| உலகளாவிய | 564,083 | 749,307 | 32.8 |
| ஆண்டு இறுதியில் வெளிநின்ற | | | |
| கொடுகடன் (ரூ.மில்) | 15,009 | 21,125 | 40.7 |
| உள்ளூர் | 2,331 | 709 | -69.6 |
| உலகளாவிய | 12,678 | 20,416 | 61.0 |
| வரவேண்டிய நிலுவை | | | |
| (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 8.20 | 6.84 | -16.6 |
| வரவேண்டிய முன்னைய நிலுவை | | | |
| (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 7.10 | 5.24 | -26.2 |
| வணிகர்களிடமிருந்தான தரகு (%) | 0.25-3.5 | 1.5-4.0 | 0.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வினைத்திறன் மற்றும் அதிகரித்த வெளிநாட்டு செலாவணி வருவாய்கள் போன்றவற்றின் காரணமாக அதிகரித்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கித்துறையின் செலவு வினைத்திறனிலான மேம்பாட்டைப் பிரதிபலித்து வருவாய்க்கான செலவு விகிதம் மற்றும் தொழிற்பாட்டு வருவாய்க்கான செலவு விகிதம் ஆகியவிரண்டும் இவ்வாண்டில் மேம்பாடடைந்தன. மூலதனப் போதுமை விகிதமானது ஆகக் குறைந்த தேவைப்பாடான 10 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 11.5 சதவீதமாகவிருந்தது. 2006 இல் சந்தை இடர்நேர்வுக்கானதொரு மேலதிக மூலதனக் கட்டணத்தின் அறிமுகமானது மூலதனப் போதுமை விகிதத்தில் வீழ்ச்சியொன்றிற்கு வழிவகுத்தது. செயற்படாக்கடன்கள் 2005 இறுதியின் 6.8 சதவீதத்திலிருந்து 2006 இறுதியில் 5.4 சதவீதத்திற்கு குறைவடைந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கொடுகடனின் தரம் மேம்பாடடைந்ததனை பிரதிபலித்தன. இந்த மேம்பாடானது கடன்வழங்கல் பட்டியல்களின் விரிவாக்கம், வலுவான மீள் பெறுகைகள் மற்றும் சில வங்கிகள் அறவிடமுடியாக் கடன்களை பதிவழித்தமை போன்றனவற்றின் தேறிய விளைவாகும். கொடுகடன் இழப்புக்களை உள்ளீர்த்து கொள்வதற்கான சிறந்த காப்பினை வழங்குவதற்கான செயற்படாக் கடன்களுக்கு கிடைக்கத்தக்கதான ஏற்பாட்டு உள்ளடக்கம் 74 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளையில் மூலதனத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் 2006 இறுதியில் 12.6 சதவீதத்திற்கு மேம்பாடடைந்தது. வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மை ஒரு ஆரோக்கியமான மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட போதிலும் முக்கியமாக மத்திய வங்கியினால் நாணயக்கொள்கை படிப்படியாக இறுக்கமாக்கப்பட்டதனால் திரவச்சொத்து விகிதம் சிறியளவு வீழ்ச்சியினை பதிவு செய்தது.

**அரச வங்கிகளின் வினைத்திறனை மேம்படுத்தல்: வினைத்திறனை மேம்படுத்துவதற்காக அரச வங்கிகளினால் உபாய தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் வழிகாட்டலின் கீழ் உருவாக்கப்பட்ட உபாயத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 2006இல் மேலும் முன்னேற்றமடைந்தது.** இவ்வாண்டில் இரண்டு வங்கிகளினாலும் கிளை தன்னியக்கமாக்குதல் மூலதன விரிவாக்கம், முகாமைத்துவ தகவல் முறைமைகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி போன்றவற்றில் மேம்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த வங்கிகளின் செயற்படாக்கடன்களின் மீள்பெறுகையும் இவ்வாண்டில் மேம்பாடடைந்தது.

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

**இலாபங்களிலான எதிர்க்கணிய வளர்ச்சிக்கு மத்தியிலும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கித்துறை மேம்பட்ட செயல்லாற்றத்தினை பதிவு செய்தன.** மொத்தச் சொத்துக்கள் 11.8 சதவீத வளர்ச்சியடைந்தவேளையில் முக்கியமாக வட்டி எல்லையினான சுருக்கம் மற்றும் மூலதன வருவாய்களிலானதொரு குறைப்பு போன்றவற்றின் காரணமாக வரிக்கு முந்திய இலாபம் 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த வைப்புக்களும் கடன் பெறுகைகளும் முறையே 8.4 சதவீதத்தினாலும் 35 சதவீதத்தினாலும் அதிகரித்தன. லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின் நுழைவு மற்றும் என்டிபி வீடமைப்பு வங்கியின் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி லிமிடெட்டுடனான இணைவு என்பன காரணமாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 2006 இறுதியில் 14 ஆக மாற்றமின்றி தொடர்ந்திருந்தது. உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் கிளை வலையமைப்பு 2006 இறுதியில் 409 ஆக அதிகரித்தது.

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கடன்வழங்கலானது, வீடமைப்பு, கைத்தொழில் மற்றும் நிதியியல் துறைகளில் அதிகரித்து காணப்பட்டது.** இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் இந்த மூன்று துறைகளும் 65 சதவீதத்திற்கு வகை கூறின. முக்கியமாக வீடமைப்புத் துறைக்கு கடன் வழங்குகின்ற வங்கிகள் இருக்கின்றமை காரணமாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கடன்கள் வீடமைப்புத்துறையில் அதிகரித்துக் காணப்பட்டன. உரிமம் பெற்ற

**அட்டவணை 8.5**

**உரிமை பெற்ற சிறப்பியல்புவாய்ந்த நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் துறைவாரியான பகிர்ந்தளிப்புக்கள் (அ)**

ரூபா மில்லியன்

| துறை | 2005(ஆ) | 2006 (இ) |
|---|---|---|
| **ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள்** | **52,182** | **51,716** |
| வேளாண்மை | 1,478 | 1,101 |
| கைத்தொழில் | 10,793 | 4,548 |
| சுற்றுலா | 521 | 777 |
| வர்த்தகம் | 6,472 | 5,907 |
| நிதி | 11,092 | 13,877 |
| வீடமைப்பு | 12,718 | 15,239 |
| கடன் மீட்பு | 56 | 243 |
| ஏனைய கடன்கள் | 9,051 | 10,023 |
| **வழங்கப்பட்ட கடன்கள் (ஈ)** | **56,052** | **69,564** |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் | 107 | 135 |

(அ) பிரதேச அபிவிருத்தி வங்கி நீங்கலாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மை உள்ளடங்கி. தேசிய அபிவிருத்தி வங்கியின் தொழிற்பாடுகள் 2005 யூன் மட்டும். 2006 ஒகத்து முதல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி வங்கி தேசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

(ஆ) திருத்தப்பட்டவை

(இ) தற்காலிகமானது

(ஈ) முன்னைய ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்டு ஆனால் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்குகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்தச் சொத்துக்களில் அரச பிணையங்கள் மீதான முதலீடு 42 சதவீதத்திற்கு வகை கூறியது. 2006 இறுதியில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வெளிநின்ற கடன்கள் மற்றும் வைப்புக்கள் முறையே ரூ.137 பில்லியனாகவும் ரூ.250 பில்லியனாகவும் காணப்பட்டன. அதேவேளை, இத்துறைக்கான வரிக்கு முந்திய இலாபம் 2005இன் ரூ.7.4 பில்லியனிலிருந்து ரூ.6.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

## பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்

**பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளது செயற்பாடுகள் மேலும் விரிவடைந்ததுடன் அதிகரித்த இலாபத்தன்மை, மூலதன மட்டங்கள், சொத்துக்களின் தரம் மற்றும் முன்மதிகரமான ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதிலான மேம்பாடுகள் போன்றவற்றால் ஆதரவளிக்கப்பட்டு அவற்றின் நிதியியல் உறுதிப்பாடு மேம்பாடடைந்தது.** 2006இல் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ஏறத்தாள 29 சதவீதத்தினால் ரூ.113 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்தன. இது குறிப்பாக, பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளால் வழங்கப்பட்ட குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு வசதிகள் வகையிலான நிதியியல் கடன் வசதிகளின் விரிவாக்கத்தினை பெருமளவுக்கு பிரதிபலித்தது. 2006 இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் வைப்புப் பொறுப்புக்கள் மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப் படுத்தப்படுகின்ற வைப்புக்களை ஏற்கும் முக்கிய நிறுவனங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்களில் 3.7 சதவீதத்திற்கு வகை கூறின. பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் வியாபாரச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முக்கியமாக குத்தகை, வாடகைக் கொள்வனவுகள், உண்மைச் சொத்துக்களது செயற்பாடுகளில் அதிகரித்துக் காணப்பட்டன. 2006இல் பதிவு செய்யப்பட்ட ஒரு புதிய நிதிக்கம்பனியின் வருகையுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 29 ஆக அதிகரித்தது.

**பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளினால் வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் 2006இல் 29 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் குறைந்த நம்பகத்தன்மை கொண்ட வாடிக்கையாளருக்கு கடன்வழங்குவதனால் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளினால் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்

உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளால் அறவிடப்பட்டதனைவிட உயர்ந்த கடன்வழங்கல் வீதங்கள் அறவிடப்பட்டன. குத்தகையும் வாடகைக் கொள்வனவு வசதிகளும் 2006 இல் மொத்தச் சொத்துக்களில் 50 சதவீதத்திற்கும் மொத்தக் கடன்களில் 70 சதவீதத்திற்கும் வகை கூறின. குத்தகையும் வாடகைக் கொள்வனவு வசதிகளும் வாகனங்களின் கொள்வனவிற்காக அதிகளவில் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் பன்முகப்படுத்தலுக்கான தேவையொன்று அதிகளவில் உணரப்படுகின்றது. உண்மைச் சொத்துக்களின் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மொத்த கடன்வசதிகளில் 10 சதவீதமாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் இம் மட்டத்திலான வெளிப்படுத்துகையானது இத்துறையின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகவுள்ளதாக கருதப்படவில்லை.

**முக்கிய நிதியிடல் மூலமாக தொடர்ந்து காணப்பட்ட வைப்புக்கள் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த மூலவளங்களில் 52 சதவீதத்தினைப் பிரதிபலிக்கின்றன.** மூலதன நிதியங்கள் வைப்புப் பொறுப்புக்களின் 10 சதவீதத்தினைவிட குறைவாக இருக்கக்கூடாது எனும் 2003ஆம் ஆண்டின் நிதிக்கம்பனிகள் (மூலதன நிதியங்கள்) பணிப்புரை இலக்கம் 1 இன் நியதிகளுக்கு பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் பொதுவாக இணங்கியொழுகியுள்ளன. ஏனைய முக்கிய நிதிய மூலங்களாக வங்கிக் கடன்பெறுகைகளும் (16 சதவீதம்) மூலதன நிதியங்களும் (15 சதவீதம்) காணப்படுகின்றன.

**2006 இல் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் இலாபத்தன்மையில் ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.** 2006இல் தேறிய இலாபங்கள் ரூ.2.3 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 14.3 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்துள்ளன. பெரும்பாலான பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் இலாபத்தில் இயங்கின. இந்தத் துறையின் வளர்ச்சிக்கு மேலதிக வாய்ப்பு இருப்பதனை இது பிரதிபலிக்கின்றது.

## ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

**முதனிலை வணிகர்கள்: முதனிலை வணிகர்கள் முன்னைய ஆண்டில் எதிர் நோக்கிய பின்னடைவிலிருந்து மீண்டெழுந்து அதிகரித்துச் செல்லும் வட்டி வீதச் சூழலுக்கு மத்தியிலும் இலாபங்கள், சொத்துக்கள் மற்றும் மூலதன மட்டங்களில் அதிகரிப்புக்களை 2006 இல் பதிவு செய்துள்ளனர்.** பொதுவாக, முதனிலை வணிகர்கள் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளில் தமது சொத்துப் பட்டியல்களையும் செயற்பாடுகளையும் குறைத்திருந்தார்கள். எனினும் சில முதனிலை வணிகர்கள், குறிப்பாக அரசதுறை முதனிலை வணிகர்கள் ஆண்டின் இறுதிப்பகுதியில் தமது வர்த்தக சொத்துப்பட்டியல்களை அதிகரித்துக்கொள்ள முடிந்துள்ளது. எனினும், வட்டி வீதங்களின் தொடர்ச்சியான அதிகரிப்புடன் முதலீட்டாளரது விருப்பத்தேர்வு சந்தையின் குறுங்கால முதிர்ச்சியினை நோக்கி நகர்ந்தது. 2006 இல் முதனிலை வணிகர்களின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 5 பில்லியனால் ரூ.51 பில்லியனுக்கு அதிகரித்தன.

**முதனிலை வணிகர்களின் அநேகமான நிதியியல் செயலாற்றக் குறிகாட்டிகள் 2006 இல் ஒரு மேம்பாட்டினைக் காட்டுகின்றன.** முதனிலை வணிகர்களின் வரிக்கு முந்திய தேறிய இலாபம் 2005 இன் ரூ.370 மில்லியனிலிருந்து 2006 இல் ரூ.550 மில்லியனுக்கு அதிகரித்தது. பங்கு மூலதனம் மீதான வருவாய் 8 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் சொத்துக்கள் மீதான வருவாய் சிறிதளவில் 1 சதவீதத்திற்கு அதிகரித்தது. முதனிலை வணிகர்களின் மூலதன தளமும் அதிகரித்தது.

**உள்நாட்டுச் சந்தையில் வட்டி வீதங்களிலான தளம்பலுக்கு மத்தியிலும் முதனிலை வணிகர் துறையானது உறுதியாகக் காணப்பட்டது.** அழுத்தப் பரீட்சிப்பு பகுப்பாய்வானது வட்டி வீதம் அதன் 2006 இன் மட்டத்திலிருந்து 100 அடிப்படைப் புள்ளிகளினால் மேல் நோக்கி நகர்ந்தால் முதனிலை வணிகர்துறை மூலதனத்தின் 2.3 சதவீதத்தினை (ரூ.121 மில்லியன்) மட்டுமே இழக்கும் என காட்டுகின்றது. அதிகரித்துச் செல்லும் ஒரு வட்டிவீத சூழலில் நடுத்தரகால மற்றும் நீண்டகால திறைசேரி முறிகளினை வைத்திருப்பதிலுள்ள இடர்நேர்வின் காரணமாக முதனிலை வணிகர்கள் தமது சொத்துப்பட்டியல்களை குறுங்கால முதிர்வுகளைக் கொண்ட பிணையங்களை நோக்கி நகர்த்தியுள்ளனர்.

**முதனிலை வணிகர்கள் தரகுக் கட்டணமின்றி வர்த்தகம் செய்வதற்கு வசதியளிக்கும் செய்யும் புளூம்பேர்க் முறி வர்த்தகத்தளம் (இலத்திரனியல் முறி வர்த்தகர்) 2006இல் அறிமுகப்படுத்தப்பட்டது.** எனினும், அதிகரித்து செல்லும் வட்டிவீத சூழல் திறைசேரி முறிகளின் வர்த்தகத்திற்கு அனுசரணையாக அமையாததால் இந்த வசதியின் பாவனை ஆண்டின் இறுதியில் குறைவடைந்தது.

**வட்டி வீதங்களிலான அதிகரிப்பு முதனிலை வணிகர்களது வர்த்தகம் செய்யும் ஆற்றலினையும் அவர்களது நிதியியல் நிலைமையினையும் பலவீனப்படுத்தியமையின் காரணமாக முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தையில் தொழிற்படுவதில் அவர்கள் அவதானமாக இருந்தனர்.** இதன் விளைவாக, சந்தைப் பெறுமதியிலான நட்டங்களையும் மூலதன நட்டங்களையும் குறைப்பதற்காக பெரும்பாலான முதனிலை வணிகர்களின் வர்த்தகச் சொத்துப்பட்டியல்கள் குறைக்கப்பட்டன. முதனிலை வணிகர்கள் உடனடி விற்பனை சந்தையினை விட மீள்கொள்வனவு சந்தையில் தொழிற்படுவதற்கு விரும்பியமையினால் முதனிலை வணிகர்களின் வருவாய் எல்லை வருவாய்க்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்: சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் இலாபத்தன்மை, மூலதனம், சொத்தின் தரம் முன்மதிகரமான ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் போன்ற நியதிகளில் ஒரு மேம்பட்ட செயலாற்றத்தை 2006இல் பதிவு செய்தன.** 2006ஆம் ஆண்டின் இறுதியில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் எண்ணிக்கை 20 ஆகவிருந்தது. இதில் 7 கம்பனிகள் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்களில் 83 சதவீதத்திற்கு வகை கூறின. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 25 சதவீதத்தினால் ரூ. 67 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளையில் மொத்த நிதிக்குத்தகைகள் 11 சதவீதத்தினால் ரூ.29 பில்லியனுக்கு அதிகரித்தன.

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்பதற்கு அனுமதிக்கப்படாததால் அவை முக்கியமாக வங்கிக் கடன்பெறுகைகளிலும் கடன் பிணையங்களின் வழங்கலினூடாக பெறப்படும் நிதியங்களிலும் தங்கியிருந்தன.** 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்த) சட்டத்தில் "வைப்பு" என்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வரைவிலக்கணமானது விரிவானதாக இருக்கின்றமையால் இது ஒரு கிரமமான அடிப்படையில் கடன் கருவிகளினை வழங்குவதனால் பெறப்படும் கடன்பெறுகைகளையும் உள்ளடக்குகின்றது. எனவே, சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் வேண்டுதலின்பேரில் கடன் கருவிகளினை வழங்குவதன் மூலம் நிதியினைத் திரட்ட அனுமதியளிப்பதற்கு 2000ஆம் ஆண்டின்

**அட்டவணை 8.6**

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகையிடல் கம்பனிகள் குத்தகையிடல் வசதிகளின் துறைவாரியான பகுப்பாய்வு**

ரூபா. மில்லியன்

| துறை | 2005(அ) | 2006 (ஆ) |
|---|---|---|
| வேளாண்மை | 1,397.7 | 1,577.7 |
| கைத்தொழில் | 2,515.4 | 2,269.6 |
| வர்த்தகம் | 7,615.7 | 8,518.1 |
| போக்குவரத்து | 4,766.8 | 3,918.5 |
| கட்டடவாக்கம் | 1,150.6 | 1,294.0 |
| பணிகள் | 6,438.9 | 8,196.8 |
| ஏனையவை | 3,050.0 | 3,668.6 |
| **மொத்தம்** | **26,935.1** | **29,443.3** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

56ஆம் இலக்க நிதிக்குத்தகை சட்டத்திற்கான ஒரு திருத்தத்தினை மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் துறைக்கான சராசரி இணைப்பு விகிதம் (மூலதனத்திற்கான கடன் விகிதம்) தற்போதைய அனுமதிக்கப்பட்ட ஆகக்கூடிய விகிதமான 10:1 இற்கெதிராக ஏறத்தாள 4:1 ஆக காணப்படுகின்றமை உறுதியான நிதியியல் நிலையினைக் குறித்து நிற்கின்றது.

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் குத்தகை சொத்துப்பட்டியலில் ஊர்திகளுக்கான நிதியிடல் அதிகமானதாக விளங்கி 81 சதவீதத்திற்கு வகை கூறியது.** எனினும், கடன்வசதிகளுக்கான பிணையாக ஊர்திகள் கருதப்படுதல் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அத்தகைய ஊர்திகளின் முழு உடமையினையும் கொண்டிருத்தல் போன்ற நிதிக்குத்தகைகளின் தன்மையின் காரணமாக திருப்பிச் செலுத்தத் தவறுவதற்கான இடர்நேர்வுகள் பெருமளவில் குறைக்கப்பட்டன. நிதியிடப்பட்ட ஊர்திகள் பொது போக்குவரத்து, பொருட்கள் போக்குவரத்து மற்றும் பரந்துபட்ட வாடிக்கையாளர்களது தனிப்பட்ட பாவனை போன்ற நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டமையினால் இவ்வதிகரித்த கடன் வழங்கலானது இத்துறையினது ஒரு முக்கிய இடர்நேர்வாக கருதப்படவில்லை. எனினும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கம்பனிகள் இயந்திரங்கள் போன்ற மூலதன உபகரணங்களது கொள்வனவுக்கான வசதிகளினை வழங்குவதன் மூலம் அவற்றின் குத்தகை சொத்துப்பட்டியல்களை பன்முகப்படுத்துவதனை ஊக்குவிப்பதற்கு கவனம் செலுத்தப்படுகின்றது.

**வணிக வங்கிகள்: இத்துறையின் மொத்தச் சொத்துக்கள் 2005 இன் ரூ.24.0 பில்லியனிலிருந்து ரூ.31.4 பில்லியனுக்கு அதிகரித்து 2006 இல் ஆண்டு காலப்பகுதியில் வணிக வங்கித்தொழில் செயற்பாடுகள் தொடர்ந்தும் உயர்வடைந்தன.** இத்துறையின் வரிக்கு முந்திய இலாபம் முன்னைய ஆண்டின் ரூ.183 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2006இல் ரூ.350 மில்லியனாகக் காணப்பட்டது. குத்தகையிடல், நிதியியல் கருவிகளிலான முதலீடு மற்றும் கடன்வழங்கல் நடவடிக்கைகள் என்பன வணிக வங்கித்தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளன.

**நம்பிக்கைக் கூறுகள்: கொழும்பு பங்குச்சந்தை நடவடிக்கைகளின் அதிகரிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன காரணமாக நம்பிக்கை கூறு துறையின் செயலாற்றம் மேம்பாடடைந்தது.** நம்பிக்கை கூறுகளின் மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூ.4.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 18.6 சதவீதத்தினால் 5.4 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. முதலீடுகளின் பெறுமதியிலான உயர்வு மற்றும் வழங்கலில் உள்ள நம்பிக்கைக் கூறுகளின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு நம்பிக்கைக் கூறுகளின் தேறிய சொத்துக்களின் பெறுமதி 19.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நம்பிக்கைக் கூறுகளின் முதலீடுகளில் முக்கிய கருவியாக பங்கு சொத்துப்பட்டியல் விளங்கி மொத்த முதலீடுகளில் ஏறத்தாள 69 சதவீதத்திற்கு வகை கூறியது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான முதலீடுகளின் பங்கு வீழ்ச்சியடைந்தவேளையில் திறைசேரி முறிகள் மீதான முதலீடுகள் இவ்வாண்டில் அதிகரித்தன.

**துணிகர தொழில்முயற்சி மூலதன நிறுவனங்கள்:** துணிகர தொழில் முயற்சி மூலதன நிறுவனங்களின் முதன்மை வியாபாரமானது பொதுவாக உயர்ந்த விளைவுகளை தரக்கூடிய, தொழில் முயற்சியாளர்களால் அறிமுகம் செய்யப்படும் முக்கியமான புதிய தொழில் முயற்சிகள் போன்ற உயர் இடர்நேர்வினைக் கொண்ட முதலீடுகளுக்கு பங்கு மூலதனம் வழங்குவதாகும். இவ்வாண்டு காலப்பகுதியில் பங்குச் சந்தை செழிப்புற்று காணப்பட்டதன் விளைவாக துணிகர தொழில்முயற்சி மூலதனங்களிலான முதலீடுகள் கவர்ச்சிகரமற்றதாக விளங்கி துணிகரத் தொழில்முயற்சி மூலதன நிறுவனங்களின் செயற்பாடுகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன.

## ஒப்பந்த ரீதியிலான சேமிப்பு நிறுவனங்கள்

**ஓய்வுகால நல நிதியங்கள்:** ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், அரசதுறை சேமலாப நிதியம், உதவுதொகை செலுத்தலூடான சேமலாப நிதியம் மற்றும் தனியார் சேமலாப நிதியம் போன்றவற்றை உள்ளடக்கிய ஓய்வுகால நல நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் 14.0 சதவீதத்தினால் ரூ.671.5 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்து ஆண்டிறுதியின் நிதியியல் முறைமையின் சொத்துக்களில் 18.2 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தின.

**தனியார்துறை ஊழியர்களுக்கான முக்கிய ஓய்வூதிய நல நிதியமான ஊழியர் சேமலாப நிதியமானது தேறிய பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு வருவாய்களிலானதொரு அதிகரிப்புடன் விரிவடைந்தது.** நாட்டின் ஓய்வுகால நல நிதியங்களில் ஏறத்தாள 72 சதவீதத்திற்கு வகை கூறுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2006 இறுதியில் 14.9 சதவீதத்தினால் ரூ.492 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்தன. ஊழிய சேமலாப நிதியத்தின் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் முக்கியமாக அரசாங்கப் பிணையங்களை (96.8 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. ஊழியர் சேமலாப நிதியம் ஆண்டிற்கான மொத்த வருவாயாக ரூ.46.4 பில்லயனினை உழைத்து 12.22 சதவீத விளைவினைப் பதிவு செய்துள்ளது. 2006 இல் அங்கத்தவர்களது மீதிகளின் மீது 10.2 சதவீத விளைவு வீதம் அறிவிக்கப்பட்டது. இது 2006 இன் நிறையேற்றப்பட்ட ஆண்டுச்சராசரி வைப்பு வீதமான 6.8 சதவீதத்தினை விட உயர்வானதாகும்.

**தொழில்தருனரால் பங்களிப்புச் செய்யப்படுகின்ற நாட்டின் ஓய்வூதிய நல திட்டமான ஊழியர் நம்பிக்கை நிதியம் உயர்ந்த தேறிய பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு வருமானம் என்பன காரணமாக அதன் சொத்து தளத்தில் ஒரு அதிகரிப்பினைப் பதிவு செய்தது.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 14 சதவீதத்தினால் ரூ.67 பில்லியனுக்கு அதிகரித்தவேளையில் மொத்தப் பங்களிப்புக்கள் 2006இல் 20 சதவீதத்தினால் ரூ.6 பில்லியனுக்கு அதிகரித்தன. 2006 இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த வெளிநின்ற அங்கத்தவர் நிலுவைகள் 15 சதவீதத்தினால் ரூ.66 பில்லியனுக்கு உயர்வடைந்தன. மொத்த முதலீடுகள் 2006 இறுதியில் ரூ.64 பில்லியனாகக் காணப்பட்டு பெருமளவிற்கு அரசாங்கப் பிணையங்களை (93 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது.

**அரசதுறை சேமலாப நிதியம் மற்றும் உதவுதொகை செலுத்தலூடான சேமலாப நிதியம் போன்றவற்றின் சொத்துத்தளம் 2006இல் ரூ. 16 பில்லியனாகவிருந்தது.** இதற்கு மேலதிகமாக, 2006 இல் அங்கீகரிக்கப்பட்ட 88 தனியார் சேமலாப நிதியங்கள் ரூ.95 பில்லியன் மொத்தச் சொத்துக்களுடன் தொழிற்பாட்டிலிருந்தன.

**ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன தலா இரண்டு மில்லியன் செயற்படும் அங்கத்தவர் கணக்குகளை கொண்டிருந்த போதிலும் மூன்று மில்லியனுக்கு மேற்பட்ட முறைசார் துறை ஊழியர்கள் எவ்வித சமூக பாதுகாப்பு திட்டங்களிலும் உள்ளடக்கப்படவில்லை.** தொழிற்படையிலுள்ள இவ்வாறானவர்களுக்கான பிரத்தியேகமான சுயமாக பங்களிப்புச் செய்யும் சமூகப் பாதுகாப்புத்திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியங்களை மத்திய வங்கி தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

**காப்புறுதிக் கம்பனிகள்: காப்புறுதித் தொழில்துறையானது 2006 இல் கட்டுப்பணம், இலாபங்கள் மற்றும் சொத்துக்களின் நியதிகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை பதிவு செய்தது.** தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியுடனான இணைவு மற்றும் செலிங்கோ தக்காபுல் காப்புறுதிக் கம்பனியின் உருவாக்கம் என்பவற்றினால் 2006 இன் இறுதியில் இலங்கையில் ஆயுள் மற்றும் பொதுக்காப்புறுதியில் ஈடுபட்டுள்ள காப்புறுதி நிறுவனங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் அதே எண்ணிக்கையான 15ஆக 2006இலும் தொடர்ந்தும் மாற்றமின்றியிருந்தது. காப்புறுதிக் கம்பனிகள் கூட்டாக

நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்களில் 2.9 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் 2006 காலப்பகுதியில் 2.1 சதவீதத்தினால் ரூ.107.3 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்தன. இத்தொழிற்துறையானது 72 சதவீதமான சொத்துக்களை கொண்ட இரண்டு பாரிய நிறுவனங்களில் செறிவுற்றுக் காணப்படுகிறது. காப்புறுதி நுழைவானது, அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மொத்தக் கட்டுப்பணம், 2006 இலும் 1.3 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டவேளையில் காப்புறுதி அடர்த்தி, அதாவது தலைக்குரிய கட்டுப்பணம், 2005 இன் ரூ.1,543 இலிருந்து 2006 இல் ரூ.1,804ஆக அதிகரித்தது.

## 8.3 நிதிச் சந்தைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை

**இறுக்கமான திரவத்தன்மை நிலைமையினைப் பிரதிபலித்து வங்கிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களின் அளவு** 2006 இன் முதலாது காலாண்டில் ரூ.310 பில்லியனிலிருந்து இறுதிக் காலாண்டில் ரூ.610 பில்லியனுக்கு அதிகரித்தது. இதனுடன் ஒத்ததாக வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையின் நாளாந்த சராசரி அளவு முதலாம் காலாண்டின் ரூ.5 பில்லியனிலிருந்து ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஏறத்தாள ரூ.10 பில்லியனுக்கு அதிகரித்தது.

சில வங்கிகளுக்கிடையில் திரவத்தன்மை உயர்வாக செறிவுற்றுக் காணப்பட்டமை மற்றும் அரசாங்கப் பிணையங்களது கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பிடும் போது அழைப்புப்பண கொடுக்கல் வாங்கல்களுடனிணைந்த வரி வேறுபாடுகள் என்பனவற்றின் விளைவாக அழைப்புப் பணச்சந்தையில் அமைப்பு ரீதியான நெகிழ்வற்றதன்மை காணப்பட்டது.

### உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை

**உயர்ந்த பன்னாட்டு வர்த்தகம் மற்றும் தனியார் பண அனுப்பல்களின் பாய்ச்சல்களைப் பிரதிபலித்து வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செயற்பாட்டு மட்டம் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** வெளிநாட்டு செலாவணி சந்தையின் செயற்பாடுகளை விரிவாக்குவதற்காக வர்த்தக வங்கிகள் தமது உள்நாட்டு கம்பனி வாடிக்கையாளர்களுக்கு ரூபா அடிப்படையிலான குறுக்கு நாணய தெரிவுகளை வழங்குவதற்கு இவ்வாண்டு காலப்பகுதியில் மத்திய வங்கி அனுமதியளித்தது. வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்களது வெளிநாட்டு செலாவணி விற்பனவுகளையும் கொள்வனவுகளையும் உள்ளடக்கிய வாடிக்கையாளர் சந்தை ரூபா மிதக்கவிடப்பட்டதிலிருந்து மிக உயர்வான கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்துள்ளது.

**அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகளின் தாக்கத்தினை குறைப்பதற்கும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலுள்ள தளம்பலினைக் குறைப்பதற்கும் எண்ணெய் இறக்குமதி செய்யும் கம்பனிகள் காப்பீடு ஏற்பாட்டில்** நுழைவதற்கு வசதியளிப்பதற்காக எண்ணெய் காப்பீட்டுக் கருவிகளினை அபிவிருத்தி செய்வதற்கு வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி ஊக்கமளித்தது. காப்பீட்டு கருவிகளது அறிமுகம் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தையினை மேலும் அபிவிருத்தி செய்யும்.

### அரச பிணையங்கள் சந்தை

**ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட படுகடன்: அரசாங்கம் தனது வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளின் ஒரு பகுதியினைப் பூர்த்தி செய்வதற்காக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கருவிகளான திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் ரூபாக் கடன்களினூடாக தொடர்ந்தும் நிதியினைத் திரட்டியது.** அதிகரித்துச் செல்லும் வட்டிவீதச் சூழல் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பன காரணமாக சந்தையின் விருப்பத்தேர்வு குறுங்கால முதிர்வுகளை நோக்கியதாகவிருந்தது.

**முதலாந்தரச் சந்தையிலான திறைசேரி உண்டியல்களின் மொத்த வழங்கல்கள் 2005 உடன் ஒப்பிடுமிடத்து 2006இல் அதிகரித்தது.** மொத்த நியதிகளில் அரசாங்கம் ரூ.628 பில்லியன் தொகையான திறைசேரி உண்டியல்களை வழங்கியது. தேறிய நியதிகளில், ஏல முறைமையினூடாக ரூ. 24 பில்லியன் புதிய வழங்கல்கள் காணப்பட்டன. மொத்த வழங்கல்களில் 64 சதவீதம் 91 நாள் திறைசேரி உண்டியல்களாக அமைந்து பணச்சந்தையில் மேலதிக திரவத்தன்மை அழுத்தத்தினை விளைவித்தன.

**திறைசேரி முறி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மொத்தமாக ரூ.310 பில்லியன் வழங்கப்பட்டது. மொத்தத்தில், ரூ.43 பில்லியன் தொகை ஏலங்களினூடாகவும் ரூ.267 பில்லியன் நேரடி விற்பனைகளூடாகவும் வழங்கப்பட்டன.** இது அரசாங்கம் நேரடி விற்பனையினூடாக வழங்கிய ரூ.6 பில்லியன் பெறுமதியுடைய சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்ட முறிகளையும் உள்ளடக்குகின்றது.

**ஐ.அ. டொலரில் குறித்துரைக்கப்பட்ட படுகடன்: இலங்கை அபிவிருத்தி முறிகள் 2006 யூன், ஓகத்து மற்றும் செத்தெம்பரிலான மூன்று ஏலங்களினூடாக வழங்கப்பட்டன.** அனைத்து மூன்று ஏலங்களும் மேலதிக கோரல்களைக் கொண்டிருந்ததுடன் ஈராண்டு (ஐ.அ.டொலர்கள் 320 மில்லியன்) மற்றும் மூன்றாண்டு (ஐ.அ.டொலர்கள் 260 மில்லியன்) முதிர்வுகளுடன் மொத்தமாக ஐ.அ.டொலர்கள் 580 மில்லியன் திரட்டப்பட்டன. இந்த முறி வழங்கல்களுக்கான வட்டி வீதங்கள் 2 ஆண்டு முதிர்விற்கு ஆறு மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்திற்கு மேலதிகமாக 132 அடிப்படைப்புள்ளிகளையும், 3 ஆண்டு முதிர்விற்கு 141 அடிப்படைப்புள்ளிகளையும் கொண்டிருந்தன. இலங்கை தேசத்தை கட்டியெழுப்பும் முறி எனும் ஒரு புதிய படுகடன் கருவியொன்று அரசாங்கத்தினால் பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்டு 2006 இன் இறுதியில் ஐ.அ.டொலர்கள் 2.5 மில்லியன் திரட்டப்பட்டன. உள்நாட்டு படுகடன் பிணையங்கள் சந்தை மீதான அழுத்தத்தினை குறைப்பதற்காகவும் வட்டிவீத கட்டமைப்பினை உறுதியாக்குவதற்காகவும் கூட்டுக்கடனூடாக ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறுமதியான 3 ஆண்டு முதிர்வினைக் கொண்ட வெளிநாட்டு வர்த்தக கடன் பெறுகையொன்று இலண்டன் வங்கிகளுக்கிடையிலான ஆறுமாத வழங்கல் சதவீதத்திற்கு மேலதிகமாக 75 அடிப்படைப்புள்ளிகளைக் கொண்டதான வட்டி வீதத்தில் பெறப்பட்டது.

**புதிய அபிவிருத்திகள்: அரசாங்கப் பிணையங்கள் சந்தை பகுதியளவில்**

**அட்டவணை 8.7**
**பணச் சந்தைத் தொழிற்பாடுகள் 2004 - 2006**

ரூபா மில்லியன்

| | | அழைப்புப் பணச்சந்தை | முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்தக் கடன் வழங்கல்/ கடன்பாடு | வழங்கப்பட்ட தொகை | கொள்வனவு செய்யப்பட்ட தொகை | | |
| | | | | மத்திய வங்கிகள் | வர்த்தக வங்கிகள் | ஏனையவை |
| 2004 | 1ஆம் காலாண்டு | 183,377 | 103,970 | 29,917 | 48,904 | 25,149 |
| | 2ஆம் காலாண்டு | 372,607 | 104,683 | 20,000 | 62,929 | 21,754 |
| | 3ஆம் காலாண்டு | 350,969 | 136,022 | 35,550 | 72,623 | 27,849 |
| | 4ஆம் காலாண்டு | 456,537 | 125,298 | 47,790 | 58,468 | 19,040 |
| 2005 | 1ஆம் காலாண்டு | 310,678 | 98,810 | 29,923 | 45,349 | 23,538 |
| | 2ஆம் காலாண்டு | 230,345 | 108,231 | 27,943 | 63,213 | 17,075 |
| | 3ஆம் காலாண்டு | 283,380 | 147,252 | 35,209 | 72,568 | 39,475 |
| | 4ஆம் காலாண்டு | 232,835 | 131,476 | 13,034 | 77,927 | 39,515 |
| 2006 | 1ஆம் காலாண்டு | 311,359 | 147,481 | 16,796 | 72,639 | 58,046 |
| | 2ஆம் காலாண்டு | 453,677 | 144,412 | 29,592 | 65,314 | 49,506 |
| | 3ஆம் காலாண்டு | 455,027 | 152,254 | 47,755 | 58,985 | 45,514 |
| | 4ஆம் காலாண்டு | 609,438 | 183,719 | 71,581 | 62,743 | 49,395 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**தாராளமயமாக்கப்பட்டு 2006 நவெம்பர் முதல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் 5 சதவீதமளவிற்கு கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.** மூலதனக் கணக்கினை மேலும் தாராளமயமாக்குவதற்கும் முதலீட்டாளர் தளத்தினை பரவலாக்கி முறிகள் சந்தையில் போட்டியினை அதிகரிப்பதன் மூலம் மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்குமாக இந்த வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

## கம்பனிப்படுகடன் பிணையங்கள் சந்தை

**வர்த்தகப் பத்திரங்கள்:** 2006ஆம் அண்டு காலப்பகுதியில் வர்த்தக பத்திரங்கள் சந்தையின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததுடன் இது வட்டி வருமானத்தின் மீதான பிடித்து வைத்தல் வரி 2005இல் நீக்கப்பட்டமையினதும் அதிகரித்த பொருளாதார செயற்பாடுகளினதும் காரணமாகவிருக்க முடியும். வர்த்தகப் பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்ட நிதிகளின் மொத்தப் பெறுமதி 2005இல் ரூ.10.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2006ஆம் ஆண்டில் இரு மடங்குகளுக்கு மேலாக ரூ.23.5 பில்லியனுக்கு அதிகரித்தது. வர்த்தகப் பத்திரங்களுக்கு பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்கள் 2005இன் 8.90-14.25 சதவீத வீச்சுடன் ஒப்பிடும்போது 2006 இறுதியில் 10.80-16.95 சதவீத வீச்சில் காணப்பட்டன. வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களின் மொத்த பெறுமதியில் 95 சதவீதமானவை 3 மாதங்களுக்குக் குறைந்த முதிர்வினைக் கொண்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் வெளிநின்ற வர்த்தக பத்திரங்களின் பெறுமதி ரூ.3.4 பில்லியனாக காணப்பட்டது.

**கம்பனி முறிகள்: கம்பனி முறிகள் சந்தையின் செயற்பாடுகள் 2006இல் மேம்பாடடைந்தன.** செலான் வங்கியும் டி.எவ்.சி.சி. வங்கியும் 2006இல் பிணையளிக்கப்படாத மீட்கத்தக்க துணைத்தொகுதிக் கடன்களின் இரு புதிய வழங்கல்களை மேற்கொண்டன. கம்பனி முறிகளினூடாக திரட்டப்பட்ட மொத்த நிதியங்கள் 2005 இன் ரூ.350 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2006 இல் ரூ.2,257 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் கடன் பிணையங்களது வர்த்தக செயற்பாடுகள் ஒப்பீட்டளவில் தாழ்வாகக் காணப்பட்டன. கம்பனிப்படுகடன் புரள்வானது ரூ.405 மில்லியன் மொத்த புரள்வுடன் முன்னைய ஆண்டினை விட 96 சதவீத நேர்க்கணிய வளர்ச்சியினைக் காட்டியுள்ளது.

## பங்குச் சந்தை

**கொழும்பு பங்குப் பரிவர்த்தனை குறிப்பாக ஆண்டின் இறுதிப்பகுதியில் ஒரு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினைப் பதிவு செய்தது.** 2006இல் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணும் மிலங்கா விலைச்சுட்டெண்ணும் முறையே 42 சதவீதம் மற்றும் 51 சதவீதத்தினால் உயர்வடைந்தன. சந்தை மூலதனவாக்கம் 43 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.835 பில்லியனை அடைந்தது இது மொ.உ. உற்பத்தியில் ஏறத்தாள 30 சதவீதமாகும். மேம்பாட்டிற்கு முக்கிய பங்களிப்புச் செய்த துறைகளாக தொலைத்தொடர்பூட்டல்கள், பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள் மற்றும் வங்கி, நிதி மற்றும் காப்புறுதி போன்றன விளங்கி சந்தை மூலதனவாக்கத்தில் 65 சதவீதத்திற்கு வகை கூறின.

**பங்குச் சந்தையின் ஆரோக்கியமான செயலாற்றத்திற்கு வலுவான கம்பனி உழைப்புக்களின் காரணமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் செயலாற்றம் மேம்பாடடைந்தலமையே காரணமாகும்.** சந்தைக்கான விலை உழைப்பு விகிதம், 2005 இன் இறுதியின் 12.4இலிருந்து 2006 இறுதியில் 14 ஆக அதிகரித்து மேலதிக மேம்பாட்டிற்கான சந்தையின் எதிர்பார்க்கைகளை குறித்து நிற்கின்றது. உயர்ந்த பணவீக்கத்தின் காரணமாக நிலையான வருவாய் கொண்ட பிணையங்கள் உட்பட பல பொருட்களின் எதிர்க்கணிய உண்மை வட்டி வீதங்களும் 2006இல் பங்குச் சந்தை முதலீட்டில் ஒரு நேர்க்கணியத்தாக்கத்தினைச் செலுத்தியது. 2006இல் தேறிய வெளிநாட்டுக்

**அட்டவணை 8.8** பங்குச் சந்தைக் குறிகாட்டிகள்

| | 2005 | 2006 |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (அ) | 1,922.2 | 2,722.4 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | 27.6 | 41.6 |
| மிலங்கா விலைச் சுட்டெண் (அ) | 2,451.1 | 3,711.8 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | 18.2 | 51.4 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ.பில்லியன்) (அ) | 584 | 835 |
| மொ.உ.உ.வின் சதவீதமாக (%) | 24.7 | 30.0 |
| சந்தை விலை வருவாயீட்டு விகிதம் (அ) | 12.4 | 14.0 |
| சந்தை மூலதனவாக்கத்திற்கான மொத்தப் புரழ்வு (%) | 19.6 | 12.6 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.மில்) | 114,599 | 105,154 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ரூ.மில்) | 5128 | 3,912 |
| வர்த்தகம் செய்ப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 242 | 232 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 239 | 237 |
| அறிமுகம் செய்யப்பட்டவை (ஆ) | 3 | 1 |
| பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கல் /விற்பனைக்கான வழங்கல் (ஆ) | 3 | 2 |
| உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை | 18 | 16 |
| உரிமை வழங்கல்களூடாக திரட்டப்பட்ட தொகை (ரூ.மில்) | 3,783 | 4,705 |

(அ) ஆண்டு முடிவில்

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(ஆ) பதிவினைப்பெற்றுக் கொள்வதற்கு 3 முறைகள் உள்ளன. அதாவது பொது மக்களுக்கான வழங்கலினைத் தேவைப்படுத்தாத ஒரு அறிமுகம், ஏற்கனவே உள்ள பங்குகளை பொது மக்களுக்கு வழங்குகின்ற விற்பனைக்கான வழங்கல் மற்றும் புதிய பங்குகளினை பொதுமக்களுக்கு வழங்குகின்ற உதவு தொகைக்கான வழங்கல் என்பன.

கொள்வனவுகள் ரூ.5.4 பில்லியனாக விளங்கி வெளிநாட்டு முதலீட்டாளர்களது அதிகரித்த பங்குபற்றலை குறித்து நிற்கும் அதேவேளை உள்நாட்டு முதலீட்டாளர்களது தொடர்ச்சியான ஆர்வத்தை மொத்த புரள்வில் 67 சதவீதமான அவர்களின் பங்களிப்பு தெளிவாகக் காட்டுகின்றது. இரண்டு ஆரம்பப் பொது வழங்கல்களுடன் முதலாந்தரச் சந்தையின் செயற்பாடுகள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டன. புதிய வழங்கல்களினூடாகவும் உரிமை வழங்கல்களினூடாகவும் பங்குச் சந்தையிலிருந்து திரட்டப்பட்ட மொத்த நிதியங்களின் தொகை ரூ.5.2 பில்லியனாகக் காணப்பட்டது.

**2006 இல் ஐந்து கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பங்கு மற்றும் படுகடன் பிணையங்களது புதிய வர்த்தக அங்கத்தவர்களாக அனுமதிக்கப்பட்டமையினால் வர்த்தக அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 20ஆக விளங்கியது.** கம்பனிகள் பங்குத்தரகர்களாகவும் வணிகர்களாகவும் தொழிற்படுவதற்கு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமங்கள் வழங்கப்பட்டன.

**அண்மைய ஆண்டுகளில் புதிய பட்டியலிடல்கள் அரிதாகக் காணப்பட்டமையினால் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளாக தற்போதைய மட்டமான 237 இலேயே காணப்படுகிறது.** இது கொழும்புப்

**வரைபடம் 8.2.** கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மொத்தப் புரள்வும் வெளிநாட்டுப் பங்கேற்பும்



பங்கு பரிவர்த்தனையின் வளர்ச்சிக்குத் தடையாக காணப்படுவதுடன் மூலதனச் சந்தை அபிவிருத்திகளை விரைவுபடுத்துவதற்கு இவற்றிற்கு தீர்வு காணப்படல் வேண்டும்.

## 8.4 அபிவிருத்தி நிதியும் நிதியின் கிடைப்பனவும்

### அபிவிருத்தி நிதி

**பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட வங்கிகளது கிளைகளின் எண்ணிக்கையின் அதிகரிப்புடன் அபிவிருத்தி நிதி மற்றும் கிராமிய நிதித்துறை நிறுவனங்களின் விரிவாக்கம் 2006இல் தொடர்ந்தது.** தேயிலை மற்றும் நிரந்தரப்பயிர்கள் துறைகளுக்கான ஆதரவினைத் தொடர்வதற்காக தேயிலை அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதியம் மற்றும் இரண்டாவது நிரந்தரப்பயிர் அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதியம் போன்ற கொடுகடன் திட்டங்களினை 2006இல் மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட சுசகன, சிறிய வியாபார மீள்எழுச்சி செயற்றிட்டம் மற்றும் ஜீவன சக்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற 3 வேறுபட்ட கொடுகடன் திட்டங்களை மத்திய வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இந்த மூன்று திட்டங்களின் கீழ், ரூ.5.9 பில்லியன் பெறுமதியான 13,652 கடன்கள் 2006ஆம் ஆண்டு காலத்தில் வழங்கப்பட்டது. இதில் 57 சதவீதமானவை தென்மாகாணத்திற்குள்ளும் எஞ்சியவை கிழக்கு, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

**2007இலிருந்து செயற்படவுள்ள சுனாமி மீள்நிர்மாணத்திற்கான இரண்டு புதிய கொடுகடன்தொடர்களுக்கான வரிசைகளுக்கான பூர்வாங்க வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.** சுனாமிக்குப் பின்னரான கட்டடவாக்கத்திற்கான அரசாங்க செயற்றிட்டங்களை கொண்டு நடாத்துகின்ற கட்டடவாக்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு மீள்நிதியிடலை வழங்குவதற்காக பிரான்சு அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட கட்டடவாக்கத்துறை அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் தொடர் மற்றும் விசேடமாக சுனாமியினால் நேரடியாக பாதிக்கப்பட்ட நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவதற்கான ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் கொடுகடன் தொடர் (ஒப்பந்தம் ஆ) என்பவை இக்கொடுகடன் தொடர்களாகும். ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் இக்கடனுக்கான அதியுயர் நிறுவனமாக மத்திய வங்கி தொழிற்படும்.

**நுண்பாக நிதியினைப் பகிர்ந்தளிப்பதற்கான அதியுயர் நிறுவனமான தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியமானது கிராமிய நிதித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (கிநிஅநி - சுனாமி அவசர கொடுகடன் தொடருக்கு மீள ஒதுக்கிடு செய்யப்பட்டது) மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்ற சுனாமியுடன் தொடர்புடைய ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரு கொடுகடன் திட்டங்களுக்கான ஒரு இணைப்பாளராக தொடர்ந்தும் தொழிற்படுகின்றது.** இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2005இலும் 2006இலும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியங்கள் ரூ.904 மில்லியனாகும். இத்தகைய நிதிகள் சலுகை வட்டி வீதமான 6 சதவீதத்தில் கிடைக்கக்கூடியதாகவிருந்தன. தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியமானது அதன் பங்காளி நிறுவனங்களுடன் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட ஏனைய மாவட்டங்களிலும் கொடுகடன் விநியோகத்தினைத் தொடர்ந்தது.

**ஏனைய சில செயற்றிட்டங்களும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் தொடர்ந்தும் செயற்பாட்டிலிருந்தன.** சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம், புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழான குறுங்கால பயிர்ச்செய்கைகக் கடன்கள் போன்றன இவ்வாண்டு காலப்பகுதியில் நிதியியல் வசதிகளை வழங்குவதனை மேலும் தொடர்ந்தன. பின்தொடர் அளவீடுகளில் கண்டறியப்பட்ட

**அட்டவணை 8.9 காசல்லாத கொடுப்பனவுகளின் கொடுக்கல் வாங்கல்களின் அளவும் பெறுமதியும்**

| கொடுப்பனவுமுறை | 2005 (அ) | | 2006(ஆ) | |
|---|---|---|---|---|
| | அளவு ('000) | பெறுமதி (ரூ.பில்) | அளவு ('000) | பெறுமதி (ரூ.பில்) |
| **பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்** | **150** | **17,543** | **175** | **18,110** |
| அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறை | 150 | 17,543 | 175 | 18,110 |
| **சில்லறைப் பெறுமதி கொடுப்பனவு முறைகள்** | **58,078** | **3,654** | **67,560** | **4,174** |
| பிரதான காசோலை தீர்ப்பனவுமுறை | 40,068 | 3,385 | 44,343 | 3,823 |
| ரூபா வரைவு தீர்ப்பனவுமுறை | வி.கி | 6 | வி.கி | 4 |
| பிராந்திய காசோலை தீர்ப்பனவுமுறை | 1,376 | 64 | 510(இ) | 25 (இ) |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுமுறை | 3,097 | 87 | 4,165 | 121 |
| கடன் அட்டைகள் | 12,352 | 42 | 16,391 | 55 |
| வரவு அட்டைகள் | 419 | 1 | 516 | 1 |
| இணையத்தள வங்கித் தொழில் | 688 | 52 | 1,316 | 101 |
| தொலைபேசி வங்கித் தொழில் | 78 | 5 | 319 | 33 |
| அஞ்சல் சாதனங்கள் | வி.கி | 12 | வி.கி | 11 |
| **மொத்தம்** | **58,228** | **21,197** | **67,735** | **22,284** |
| **ஐ.அ.டொலர் காசோலைத் தீர்ப்பனவுமுறை** | 106 | 16 | 98 | 21 |

(அ) திருத்தப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) 11 மே தொடக்கம் காசோலை பிரதிமைப்படுத்தலும் சுற்றோட்ட குறைப்புக்குமான முறைமை ஆரம்பிக்கப்பட்டு பிராந்திய தீர்த்தல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையால் 2006 மே 10 ஆம் திகதி வரையான தரவுகளை உள்ளடக்குகிறது.

மூலம்: இலங்கைமத்திய வங்கி

**சிறப்புக் குறிப்பு 11**

## சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன் திட்டம் தொடர்பானதொரு மதிப்பீடு

2005ஆம் ஆண்டில் நன்மை பெறுநர்களை வறுமையிலிருந்தும் கீழ் மட்டத்திலிருந்தும் அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டமை தொடர்பாகவும் சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் திட்டத்தினை மதிப்பிடுவதற்காகவும் மத்திய வங்கியானது சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன் திட்டத்தின் தாக்க மதிப்பீட்டு அளவீட்டினை நடாத்தியது. அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வாழக்கைத்தரம் தொடர்பாக பயன்பெறுநர்களிடம் மதிப்பிடும் முகமாக 15 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன்திட்டத்தில் குறைந்தது 5 ஆண்டுகளாவது பயன்பெறும் 1200 மாதிரி பயன்பெறும் வீட்டுத்துறையினரை உள்ளடக்கி 2005இல் பரந்த விளைவு மதிப்பீட்டு அளவீட்டினை நடாத்தியது. விஞ்ஞான பூர்வமான மற்றும் சமூக பொருளாதார சிறப்பியல்புகள், காணிச் சொத்துரிமை, மூலதனப் பொருட்கள் மற்றும் வாடிக்கையாளர் நிலைத்து நிற்கும் தன்மை, வீட்டு நிலைமைகள் மற்றும் உபயோகத்தன்மை, வருமானம், கடன்பட்ட தொகை, கடன்கள், சேமிப்புக்கள், முதலீடு, வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பயன்பெறுநர்களின் சமூக மூலதனம் என்பவற்றை உள்ளடக்கி தகவல் சேகரிக்கப்பட்டது.

சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன் திட்டம் என்பது மத்திய வங்கியினால் செயற்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்பு வழிகாட்டு முறையாகும். இந்த திட்டத்திற்கு தேவையான ஆரம்ப நிதியானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதி, கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர், மற்றும் மத்திய வங்கி (இலங்கை அரசாங்கம் சார்பாக) என்பவற்றிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இத்திட்டமானது மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தில் உருவாக்கப்பட்ட மத்திய திட்ட அலுவலகத்தினால் முகாமை செய்யப்பட்டதுடன் செயற்றிட்ட மாவட்ட அலுவலகங்கள் திட்டம் செயற்படுத்தப்பட்ட கண்டி, புத்தளம், காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டது. இத்திட்டமானது 1990ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகின்றது.

சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன் திட்டத்தின் கீழ் திட்ட மாவட்ட அலுவலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள அலுவலர்கள் தகைமையுடைய பயன் பெறக்கூடிய வறியவர்களை அடையாளம் கண்டதுடன் 4-6 பயன் பெறுநர்களுக்கு சுய உதவி குழுக்களை உருவாக்குவதற்கான உதவிகளை வழங்கினர். சுய உதவி குழுக்களின் அங்கத்தவர்கள் சமூக ஒன்றிணைப்பு மற்றும் பயிற்சிகளுக்கு உட்பட்டு வாராந்தம் ஒழுங்கான சேமிப்புக்களை மேற்கொள்ள வேண்டப்பட்டனர். சமூக ஒன்றிணைப்பு மற்றும் பயிற்சிகளை பெற்ற பயன்பெறுநர்கள் சாத்தியமான வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளை அடையாளம் கண்டு நடாத்த முடிகின்றது. சுய உதவி குழு ஏறுக்குறைய ஆறு மாத காலப்பகுதியில் தமது சேமிப்பு இயலுமையை மெய்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அங்கத்தவர்கள், தனிப்பட்ட பெறுநராக அல்லது குழுவாக இணைந்து வருமானம் உருவாக்கும் நடவடிக்கைக்காக நிதியினை கடனாகப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆரம்பக் கடன்கள் ரூ.20,000க்கு மேற்படாததாக வழங்கப்பட்டதுடன் நடைமுறையில் வழமையாக குறைந்தது ரூ.5,000 ஆக இருந்தது. இந்தக் கடனை ஒரு பயன்பெறுநர் செலுத்தி முடித்த பின்பு அடுத்த சுற்றில் அவர் கூடிய கடனைப் பெற உரித்துடையவராகிறார். இந்த முறையில் ரூ. 50,000 அதிகூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**விளைவுக் கணிப்பீட்டு அளவீட்டில் கண்டறியப்பட்டவை**

பயன்பெறுநர்களின் சராசரி மாதாந்த வீட்டுத்துறை வருமானம் (12 மாத வருமானத்தில் ஒரு மாத சராசரி) ரூ.13,101 ஆகக் காணப்பட்டது. இது மாவட்டங்களுக்கிடையில் வேறுபட்டுக் காணப்பட்டாலும் புத்தளம் (ரூ. 16,444) மற்றும் மாத்தறை (ரூ. 16,294) மாவட்டங்களின் சராசரி வருமான மட்டமானது, காலி (ரூ.11,030) மற்றும் கண்டி (ரூ.9,281) மாவட்டங்களின் வருமானத்தினை விட குறிப்பிடத்தக்களவு அதிகமாகக்

**அட்டவணை சி 11.1**




காணப்பட்டது. மேலும், தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் பணவீக்கத்துக்காக சீராக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் மட்டத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாவட்ட ரீதியான வறுமைக்கோட்டின் படி வறுமையிலுள்ள வீட்டுத்துறை, அளவு ஏறக்குறைய 37 சதவீதமாக காணப்பட்டதுடன் 63 சதவீதமான பயன்பெறுநர்கள் வறுமையிலிருந்து விடுபட்டிருந்தார்கள். அத்துடன் இத்திட்டம் மட்டும் இதற்குக் காரணமாக அமையவில்லை எனினும் உண்மை என்னவெனில், ஒட்டு மொத்த நாட்டின் கிராமிய வறுமையானது 1990/91-2002 காலப்பகுதியில் 5 சதவீதத்தினால் மட்டும் வீழ்ச்சி கண்டது. வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவு அளவீடானது சிறிய விவசாயிகள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன் திட்டமானது வீட்டுத்துறை பயன்பெறுநர்களின் வறுமையினை 63 சதவீதத்தினால் குறைப்பதற்கு பாரியளவில் பங்களிப்பு செய்துள்ளது என்பதனை சுட்டிக் காட்டியுள்ளது. மாவட்ட ரீதியிலான வேறுபாடுகள் காணப்பட்டாலும் வீட்டுத்துறையின் வறுமையின் அளவானது மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 23 சதவீதம் மற்றும் 24 சதவீதமாக குறைவாக காணப்பட்டதுடன் காலி மற்றும் கண்டி மாவட்டங்களில் 45 சதவீதம் மற்றும் 52 சதவீதமாக உயர்வாகக் காணப்பட்டது (கீழே வரைபடம் சி.11.1).

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் வருமான மட்டம் உயர்ந்துள்ளது, வறுமை குறைக்கபட்டுள்ளது மற்றும் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்துள்ளது என்ற முடிவிற்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

(அ) பயன்பெறுநர்கள் வசிக்கின்ற வீட்டின் தரமானது உயர்வடைந்துள்ளது.

(ஆ) வசதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் குறிப்பாக மின்சாரம் மற்றும் கழிவகற்றும் வசதிகள் முன்னேற்றம் கண்டுள்ளது.

(இ) நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடானது (2003/ 2004) உறுதியான நுகர்வுப் பொருட்களின் சொத்துரிமையின் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமான கிடைப்பனவு சாதகமாக இருந்தது என்பதனை வெளிப்படுத்தியது.

(ஈ) விவசாய செயற்படுத்துகை மற்றும் மூலதன பொருட்களின் சொத்துரிமையானது முன்னேற்றம் கண்டுள்ளது.

(உ) பயன்பெறும் வீட்டுத்துறையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான சிறுவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் வார இறுதி சமய உபதேச வகுப்புக்களுக்கும் சமூகமளிக்கின்றனர்.

(ஊ) சிறிய விவசாயிகள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன் திட்டமானது அவர்களை வறுமை நிலையில் இருந்து உயர்த்தியது என ஏறக்குறைய 63 சதவீதமான வீட்டுத்துறையினர் கருத்து தெரிவித்துள்ளனர்.

**சிறப்புக் குறிப்பு 11 (தொடர்ச்சி)**

### சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றவர்களுக்கான கடன் திட்டம் தொடர்பானதொரு மதிப்பீடு

(எ) ஏறக்குறைய 2/3 பகுதியினரான பயன்பெறுநர்கள் தமது வாழ்க்கை நிலை தொடர்பாக திருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

அளவீட்டில் அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயம் என்னவெனில், ஒட்டுமொத்த கடன்படும் முறைமைகள் தொடர்பான நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டில் அறியப்பட்டதற்கமைய இந்தத் திட்டத்தின் கீழான திட்ட நிதியின் கிடைப்பனவு காரணமாக பயன்பெறுநர்கள் முறைசாரா கடன் மூலங்களில் தங்கியிருப்பது குறைவாக இருந்தது. இந்தத் திட்டமானது அதிக வட்டியினை அறவிடும் இறுக்கமான கடன் வழங்குநர்களிடமிருந்தும் மற்றும் மறைமுகச் செலவுடன் தொடர்பான நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து பெறும் கடன் என்பவற்றில் இருந்து விடுவிக்கப்பட்டனர். மேலும் சராசரி கடன்படும் முறையினை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெரிய அளவிலான கடன்பகுதி உற்பத்தித்திறன் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது.

**அளவீட்டில் கண்டறியப்பட்டவற்றிலுள்ள கொள்கைத்தாக்கங்கள் சிக்கல்கள்**

(அ) கடன்பாட்டு மேல் எல்லையான ரூ. 50,000க்கு மேலதிகமாக கடன் தேவைப்படும் பயன்பெறுநர்கள் அவ்வாறான வர்த்தக கடனைப் பெற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்படல் வேண்டும். பயன்பெறுநர்களில் குறிப்பிட்ட பகுதியினரின் கருத்துப்படி அவர்களின் தற்போதைய மூலதன தேவையுடன் ஒப்பிடும் போது வழங்கப்பட்ட கடன்கள் போதுமற்றதாகவுள்ளது. இந்த நிலைமையானது தொழில் முயற்சியாளர்கள் சிறுதொழில் முயற்சியாளர்கள் என்ற நிலையிலிருந்து அபிவிருத்தியடைந்து விட்டார்கள் என்பதனை உறுதிப்படுத்தியதுடன், இதனால் வர்த்தகக் கடன் என்பது தேவையாகவுள்ளது.

(ஆ) அதிகப்படியான தொடர்புடைய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியிருப்பதுடன் சந்தைப்படுத்தலில் அதிகளவு தெளிவு உருவாக்கப்பட வேண்டியிருக்கின்றது. திட்ட பயன்பெறுநர்களிடையே செயற்றிட்டத்தின் உயர் தோல்வி விகிதம் காணப்பட்டதுடன் சந்தைப்படுத்தல் பிரச்சனையானது இவ்வாறான தோல்விகள் ஏற்படக் காரணமாக இருந்தது. எனவே வருமானம் உருவாக்கும் நடவடிக்கையை அதிகரிக்க முன்னர் தமது உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினைப் பெற்றுத் தருமாறு பயன்பெறுநர்கள் கோருகின்றனர்.

(இ) பயன்பெறுநர்கள் தமது பொருளாதார நடவடிக்கைகளை மாற்றியமைப்பதனை ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் அதிக பயன்பெறுநர்கள் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். வர்த்தகம் தவிர்ந்த சேவைத்துறை நடவடிக்கைகளில் மிகச் சிறிய அளவிலானோர் ஈடுபட்டுள்ளனர். சேவைத் துறையானது விரிவடையும் துறையாக உள்ளதனால் பயன்பெறுநர்கள் சேவைத்துறையினை நோக்கி நகர்வதற்கு ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) இத்திட்டத்தின் வெளிப்படைத்தன்மையினை உயர்த்துவதற்கு பயன்பெறுநர்களின் இலக்கினைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் வறுமைக் கோட்டின் கீழ்மட்டமானது பணவீக்கத்தினைக் கருத்தில் கொண்டு தொடர்ச்சியாக திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

வைகளினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதைப் போன்று இத்தகைய செயற்றிட்டங்களின் கீழான நிதி பெறுநர்களின் ஒரு குறிப்பிடத்தக்களவான பகுதியினர் வறுமையிலிருந்து மீளக்கூடியதாகவிருந்தது.

## நிதிபெறும் வழிமுறைகளை அதிகரித்தல்

**நிதிபெறும் வழிமுறைகளை அதிகரிப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் இவ்வாண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் 120 புதிய கிளைகளைத் திறப்பதற்கு மத்திய வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டது. இவற்றில் 56 கிளைகள் மேல் மாகாணத்திற்கு வெளியே திறக்கப்பட்டன. 120 வங்கிக் கிளைகளை வேறு இடங்களில் மாற்றி அமைப்பதற்கும் ஒப்புதல் பெறப்பட்டது. 2006இல் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளாகத் தொழிற்படுவதற்கு லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கி போன்றவற்றிற்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாக தொழிற்படுவதற்கு ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி லிமிடெட்டிற்கும் உரிமங்கள் வழங்கப்பட்டன. தற்போதுள்ள நுண்பாக நிதித்திட்டங்களின் பரப்பெல்லையும் இவ்வாண்டு காலத்தில் விரிவாக்கப்பட்டது.

**அடுத்த மூன்று ஆண்டுகளில் கொடுகடனில் பதனிடல் உட்பட வேளாண்மைக்கு வழங்கப்படும் கொடுகடனை 10 சதவீதத்திற்கு அதிகரிப்பதனை கட்டாயமாக்குவதற்கு வங்கித்தொழில் ஒழுங்குவிதிகளை திருத்துவதற்கு 2006 இற்கான வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்துள்ளது.** வங்கிகளினால் வேளாண்மைத்துறையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்ட பல்வேறு நோக்கங்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்ற வேளாண்மைத்துறைக்கான கடன்வழங்கலின் தற்போதைய நிலைப்பாட்டினை மதிப்பிடுவதற்காக ஒரு அளவீடு மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீடானது 37 உரிமம் பெற்ற வங்கிகளில் 28 வங்கிகள் 2007இற்காக முன்மொழியப்பட்ட 3 சதவீத எல்லைக்கு மேலதிகமாக வேளாண்மைக்கு கடன்களை வழங்கியுள்ளமையினைச் சுட்டிக் காட்டுகின்றது. மேலும், 22 வங்கிகளில் வேளாண்மைக் கொடுகடனின் பங்கு 5 சதவீதத்திற்கு மேலாகவும் அதேவேளையில் 14 வங்கிகளில் வேளாண்மைக் கொடுகடனின் பங்கு 10 சதவீதத்தினை விட மேலாகவும் காணப்பட்டது. வேளாண்மைத் துறையில் உள்ளடங்கும் செயற்பாடுகளுக்கான பொருத்தமான வரைவிலக்கணத்தை உருவாக்குவதும் வங்கிகளினால் வேளாண்மைத்துறைக்கு வழங்கப்பட வேண்டிய கடன்களுக்கான ஆகக் குறைந்த சதவீத தேவைப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

## 8.5 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள்

**பாதுகாப்பானதும் வினைத்திறன்மிக்கதுமான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளுக்கான உட்கட்டமைப்பானது நிதியியல் முறைமையின் சிறப்பான தொழிற்பாட்டிற்கும் உறுதிப்பாட்டிற்கும் இன்றியமையாததாக விருப்பதனால் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகளினை வலுப்படுத்தவும் முறைமைகளின் மேற்பார்வையை மேம்படுத்துவதனூடாக தொடர்புடைய இடர்நேர்வுகளினை குறைப்பதற்குமான மேலதிக வழிமுறைகள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டன.** 2006ஆம் ஆண்டு காலத்தில் நடைமுறைக்கு வந்த 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் நியதிகளின்படி கொடுப்பனவு, தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை மேற்பார்வை செய்தல், முறைசார் ரீதியில் முக்கியமான கொடுப்பனவு

மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை தொழிற்படுத்தல் மற்றும் தேசிய கொடுப்பனவுகள் கொள்கையை உருவாக்குதலும் கொடுப்பனவு முறைமைகளை அபிவிருத்தி செய்தலும் என்பன தொடர்பிலான மூன்று முக்கிய தொழிற்பாடுகளை மத்திய வங்கி மேற்கொள்கின்றது.

**முறைசார் ரீதியில் முக்கியமான உயர் பெறுமதி கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையான லங்கா செட்டிலினை மத்திய வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது.** லங்கா செட்டில் முறைமையானது உயர் பெறுமதியும் நேர முக்கியத்துவம் வாய்ந்ததுமான கொடுப்பனவுகளை செய்முறைப்படுத்துகின்ற அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை (அ.நே.மொ.தீ.) மற்றும் விநியோகத்திற்கு எதிரான கொடுப்பனவு அடிப்படையிலான பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களது தீர்ப்பனவினைக் கையாளுகின்ற பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையான (ப.பி.தீ.) லங்கா செகுயர் முறை போன்ற இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு காலத்தில் அ.தே.மொ.தீ. மற்றும் ப.பி.தீ. முறைமைகளின் கிடைப்பனவு 99.78 சதவீதமாகக் காணப்பட்டது.

**அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை (அ.நே.மொ.தீ.): மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்ற அ.தே.மொ.தீ. முறைமை உயர் பெறுமதியும் நேர முக்கியத்துவம் வாய்ந்ததுமான கொடுப்பனவுகளுக்கான வங்கிகளுக்கிடையிலான முக்கியமான நிதி பரிமாற்ற முறைமையாகக் விளங்கி** இலங்கையின் காசலல்லாத கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதியில் 81 சதவீதத்திற்கு வகை கூறியது. அ.நே.மொ.தீ. முறைமையினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 17 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2006இல் 3 சதவீதத்தினால் ரூ.18,110 பில்லியனுக்கு அதிகரித்தது. அ.நே.மொ.தீ. கொடுக்கல் வாங்கல்களில் பெரும்பான்மையானவை வங்கிகளுக் கிடையிலான அழைப்புப்பணச் சந்தை, அரசாங்க பிணையங்கள் சந்தை, வெளிநாட்டு செலாவணி சந்தை (ரூபா பிரிவு), திறந்த சந்தை தொழிற்பாடுகள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்களது அவசர கொடுப்பனவுகள் மற்றும் லங்கா செகுயரினால் தொழிற்படுத்தப்பட்ட தீர்ப்பனவு முறைமைகளின் கீழான தேறிய கடப்பாடுகளின் தீர்ப்பனவுகள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களாகும். மத்திய வங்கியானது அரச பிணையங்களின் பிணையங்களுக்கெதிராக அ.நே.மொ.தீ. முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியை தொடர்ந்தும் வழங்கியது. ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிகளின் பயன்பாடு சிறிதளவில் குறைவடைந்து பங்குபற்றுனர்களின் திரவத்தன்மை முகாமை மேம்பாடடைந்தமையை பிரதிபலிக்கின்றது.

**லங்கா செகுயர் முறைமை: லங்கா செகுயர் முறைமையானது பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையையும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமையையும் உள்ளடக்குகின்றது.** அரசாங்க பிணையங்களை இலத்திரனியல் அல்லது பத்திரங்களற்ற வடிவில் வழங்குவதற்கும் விநியோகத்திற்கு எதிரான கொடுப்பனவு எனும் அடிப்படையில் அத்தகைய பத்திரங்களற்ற பிணையங்களது வர்த்தகங்களை தீர்ப்பதற்கும் லங்கா செகுயர் வசதியளிக்கின்றது. 2006 இறுதியில் லங்கா செகுயரின் வசமிருந்த பத்திரங்களற்ற பிணையங்களது மொத்தப் பெறுமதி ரூ.1,134 பில்லியனாக விளங்கி வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 98.8 சதவீதத்திற்கு வகைகூறியது. பத்திரங்களற்ற இத்தகைய பிணையங்கள் ரூ.258 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களினையும் ரூ.876 பில்லியன் திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தன. ஆண்டின் இறுதியில், தனிப்பட்டவர்கள் மற்றும் கம்பனி வாடிக்கையாளர்களை உள்ளடக்கிய நேரடி வணிகர் பங்குபற்றுனர் ஊடாக 26,936 கணக்குகளை லங்கா செகுயர் பராமரித்தது.

**2006இல் லங்கா கிளியர் (தனியார்) லிமிடெட்டினால் வங்கிகளுக்கிடையிலான காசோலை தீர்ப்பனவு தொழிற்பாட்டினைக் கையாளுகின்ற காசோலை பிரதிமைப்படுத்தலும் மற்றும் சுற்றுாட்டக் குறைப்புக்குமான முறைமையின் (கா.பி.சு) அறிமுகமானது குறைந்த பெறுமதி கொண்ட சில்லறைக் கொடுப்பனவுகளது செய்முறையிலான முக்கியமானதொரு மேம்பாடாகும்.** காசோலையின் பிரதிகளை இலத்திரனியல் ரீதியில் சமர்ப்பிப்பதற்கு வசதியளிக்கும் கா.பி.சு. முறைமையானது நாட்டின் எந்தவொரு பாகத்திலும் வைப்புச் செய்யப்படுகின்ற காசோலைகளை இரண்டு வேலை நாட்களினுள் (T+1) தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது.

**லங்கா கிளியரினால் தொழிற்படுத்தப்பட்ட முக்கியமான காசோலை தீர்ப்பனவு முறைமையினூடாக செய்முறைப்படுத்தப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி காசல்லாத கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதியில் 17 சதவீதத்திற்கு வகை கூறியது.** லங்கா கிளியரினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்த எண்ணிக்கை 2006இல் 11 சதவீதத்தினால் 44 மில்லியனுக்கும் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி 13 சதவீதத்தினால் ரூ.3,823 பில்லியனுக்கும் அதிகரித்தன.

**லங்கா கிளியரானது மத்திய வங்கி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளருக்கான அதேநேரத்தில் அல்லாத சில்லறை நிதிப் பரிமாற்ற முறைமையான இலங்கையின் வங்கிகளுக்கிடையியான கொடுப்பனவு முறைமையினையும் தொழிற்படுத்தியது.** இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 2006இல் ரூ.85 பில்லியனுக்கு சிறிதளவால் குறைவடைந்து ஏனைய இலத்திரனியல் சில்லறை வங்கித்தொழில் பணிகளான தொலைபேசி வங்கித்தொழில், இணைய வங்கித்தொழில் மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு அட்டைகள் போன்றன பிரபல்ய மடைந்துள்ளதை பிரதிபலிக்கின்றது.

**நாட்டிற்கான தேசிய கொடுப்பனவு கொள்கையொன்றின் உருவாக்கத்திற்கு வசதியளிப்பதற்கும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் உட்கட்டமைப்பின் நவீனமயப்படுத்தலினை முன்னெடுப்பதற்குமாக அனைத்து முக்கிய தரப்பினரது பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக ஒரு தேசிய கொடுப்பனவுகள் சபையொன்றினை மத்திய வங்கி 2006இல் நிறுவியது.** கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் கொள்கைக் கட்டமைப்பானது இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வினைத்திறன் மேம்பாடுகள் தொடர்பிலான விடயங்கள் கையாளுவதுடன் 2007-2010 வரையான அடுத்த நான்காண்டு காலப்பகுதிக்கான வழிகாட்டலினையும் வழங்கும்.

## சட்டவாக்கங்களும் சீர்திருத்தங்களும்

**நடைமுறையிலுள்ள சட்டக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கும் நிதியியல் முறைமையின் சுமூகமான செயற்பாட்டிற்கு ஏதுவாக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்குமாக மீளாய்வு செய்து சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் மத்திய வங்கி தொடர்ந்தும் ஈடுபட்டது.** வங்கித்தொழில் துறையுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பரப்பினை விரிவாக்குவதற்கும் நடைமுறையிலுள்ள சட்டத்தில் காணப்படும் நிச்சயமின்மைகளுக்கு தீர்வு காண்பதற்குமாக 2006 இன் 46 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் 2006 இல் நிறைவேற்றப்பட்டது. முக்கிய திருத்தங்கள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆகக் குறைந்த பங்கு மூலதனத் தேவைப்பாட்டினை தீர்மானிப்பதில் நாணயச்சபைக்கு நெகிழ்ச்சித் தன்மையை வழங்குதல், உரிமங்கள் இடைநிறுத்தப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் நாணயச்சபையின் ஒப்புதலுக்குட்பட்டு ஏனைய சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுடன் இணைவதற்கு அனுமதியளித்தல்

மற்றும் வங்கிகளது பங்கு சொத்துரிமை தொடர்பான ஏற்பாடுகளை தெளிவுபடுத்துதல் போன்றவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்பட்டன.

**உரிமம் பெற்ற வங்கிகளினால் பொருளாதாரத்தின் எந்தவொரு குறிக்கப்பட்ட துறைக்கும் வழங்கப்படும் கடனுக்கான ஆகக் குறைந்த சதவீதத்தினை நிர்ணயிப்பதற்காக நாணயவிதிச் சட்டம் திருத்தப்பட்டது.** இந்தத் திருத்தமானது கிராமிய வேளாண்மைத்துறைக்கு வழங்கப்படும் கொடுகடனின் அளவு போதுமற்றதாக இருந்தமையினால் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் வங்கிகளினால் வேளாண்மைக்கு வழங்கப்படும் கொடுகடனை மொத்தக் கொடுகடனின் 10 சதவீதத்திற்கு அதிகரிப்பதனை கட்டாயப்படுத்துகின்ற வரவு செலவு திட்ட முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

**நிதியியல் முறைமையின் நேர்மை மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் பணம் தூயதாக்கலினால் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளை இனங்கண்டு கொண்டமையினாலும் இந்த அச்சுறுத்தலை தடுப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டத்தினை இலங்கை அறிமுகப்படுத்தியது.** 2005 இல் சட்டம் இயற்றப்பட்ட பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதனை தடை செய்யும் சட்டத்திற்கு மேலதிகமாக பணம் தூயதாக்கலை தடுப்பதனைக் கையாள்வதற்காக இரண்டு சட்டங்கள் 2006 இல் நிறைவேற்றப்பட்டன. பணம் தூயதாக்கலை தடுப்பதற்கான சட்டம் பணத்தூயதாக்கல் குற்றத்தினை வரைவிலக்கணப்படுத்தும்வேளையில் நிதியியல் அறிக்கையிடல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் போன்ற குற்றங்கள் பயனுறுதியுடன் கையாளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக நிதிக் கொடுக்கல் வாங்கல்களை கண்காணிப்பு செய்து அறிக்கையிடும் பொறிமுறையினை வழங்குகின்றது.

**சட்ட ரீதியற்ற மற்றும் கொடுப்பனவு கருவிகளுடன் தொடர்புடைய தீங்கான நடைமுறைகளை தடுப்பதற்கான ஒரு சட்டத்தின் அறிமுகத்துடன் கொடுப்பனவு முறைமையானது மேலும் வலுப்படுத்தப்பட்டது.** 2006 இல் சட்டம் இயற்றப்பட்ட கொடுப்பனவு கருவிகளின் மோசடிகள் சட்டமானது கொடுப்பனவு கருவிகளது மோசடி வாய்ந்த மற்றும் அதிகாரமளிக்கப்படாத உற்பத்தி, கொண்டு செல்லல், உடமை கொள்ளல் மற்றும் பாவனை போன்றவற்றை தடைசெய்கின்றது. இந்தச் சட்டமானது அனைத்து அட்டைகள், தகடுகள், குறியீடுகள், கணக்கு இலக்கங்கள், நுண் சில்லுகள், கட்புல சாதனங்கள் அல்லது காந்தமயப்படுத்தப்பட்ட மறைபொருள் குறிப்பிலக்கமிடுவதற்காக பயன்படுத்துகின்ற ஆவணங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. குற்றவாளிகளை பிடியாணையின்றி கைது செய்ய முடிவதுடன் வழக்குத் தொடரவும் முடியும்.

## ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வையும்

**சகல முக்கிய நிதியியல் நிறுவனங்களையும் மேற்பார்வை செய்து ஒழுங்குமுறைப்படுத்துதல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையினை மேற்பார்வை செய்தல் ஆகிய பொறுப்புக்களைக் கொண்டுள்ள மத்திய வங்கி நிதியியல் முறைமையின் பாதுகாப்பு, உறுதிப்பாடு மற்றும் வினைத்திறன் என்பவற்றை உயர்த்தும் நோக்குடன் 2006இல் பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக்கான முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தியது.** மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் மற்றும் மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்களுள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைத் தாபனங்கள் மற்றும் அரச பிணைகளிலான அங்கீகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள் என்பன உள்ளடங்குகின்றன. மேலும் நாணய மாற்றுனர்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினையும் மத்திய வங்கி கொண்டுள்ளது. பங்குகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது பங்கு பரிவர்த்தனைகள், பங்குதரகர்கள், பங்கு வணிகர்கள் மற்றும் கூறு நம்பிக்கைக் கம்பனிகள் என்பவற்றிற்கு உரிமம் வழங்குவதற்கும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கிறது. பங்குகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது பங்குகளை பொறுப்பேற்போர், மூலதனம் வழங்குவோர், கொடுகடன் தரமிடல் முகவர்கள், முதலீட்டு முகாமையாளர்கள் மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு நிலையங்கள் என்பவற்றையும் பதிவு செய்கிறது. இலங்கை காப்புறுதிச் சபையானது காப்புறுதித்தொழிற்துறை, காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் அவற்றின் முகவர்கள் மற்றும் காப்புறுதி தரகர்கள் என்போரை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்கிறது. மேலும் மத்திய வங்கியானது ஒன்றிணைந்த அடிப்படையில் உள்ளூர் நிதியியல் குழுமங்களுடைய மேற்பார்வைக்கான ஒரு செயற்திறன் வாய்ந்த முறைமையை அபிவிருத்தி செய்வதில் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்களுடன் இணைந்து செயற்படுகிறது.

**வங்கித்தொழில் நிறுவனங்களின் மேற்பார்வையானது பல்வேறு முன்மதியுடைய பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் பிரயோகித்தல் மூலம் பலமடையச் செய்யப்பட்டது.** கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளை உள்ளடக்கி இடர்நேர்வு பெறுமதியிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் அனைத்து வங்கிகளும் 10 சதவீதமான ஒரு மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவதனை தேவைப்படுத்தும் பாசல் மூலதன ஒப்பந்தத்திற்கு இசைவாக 2006இல் சந்தை இடர்நேர்வுகளுக்கான ஏற்பாட்டு தேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வதிவிடச் சொத்துக்களின் மீதான முதனிலை ஈட்டினால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றிற்கு ஏற்புடையதான இடர்நேர்வு நிறையேற்றம் முறையே 50 சதவீதத்திலிருந்து 55 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திலிருந்து 110 சதவீதத்தக்கும் அதிகரிக்கப்பட்டது. முதலீட்டுப் பட்டியல்களை முதலீட்டுக் கணக்கிற்கும் வணிக கணக்கிற்கும் வகைப்படுத்தல் மற்றும் பெறுமதியிடல் பற்றிய ஓர் பணிப்புரையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பாசல் II மூலதனப் போதுமை கட்டமைப்பினை அமுல்படுத்துவதற்கான தயார்படுத்தலானது, மூலதன அறவீடுகளுடைய சமாந்தரக் கணிப்பீடுகளுக்காக வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதன் மூலம் வசதியளிக்கப்பட்டது.** பாசல் II கட்டமைப்பானது எளிமையான அணுகுமுறைகளை பயன்படுத்தி 2008 சனவரியிலிருந்து அறிமுகப்படுத்தப்படுவதுடன் கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை ஈடுசெய்வதற்கு போதுமான மூலதனத்தை பேணுவதற்கு வங்கிகள் தேவைப்படுத்தப்படும்.

**வங்கிகளுடைய ஆகக் குறைந்த நுழைவு மூலதனத் தேவைப்பாடுகளின் அதிகரிப்பு.** வங்கித்தொழில்துறையில் இணைவுகளை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய வங்கி வங்கிகளுடைய ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை மேலும் உயர்த்துவதற்கு முன்மொழிந்துள்ளது. 2005 இல் மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஆகக்குறைந்த உரிமை மூலதன தேவைப்பாடுகளை ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.2,500 மில்லியனுக்கு அதிகரித்தது. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான (பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நீங்கலாக) ஆகக் குறைந்த உரிமை மூலதன தேவைப்பாடுகளை ரூ.200 மில்லியனிலிருந்து ரூ.1,500 மில்லியனுக்கு அதிகரித்தது. ஏற்கனவேயுள்ள வங்கிகள் அவற்றின் மூலதனத்திலான பற்றாக்குறையில் 50 சதவீதத்தை 2006 இன் இறுதியில் ஈடுசெய்யவும் எஞ்சிய 50 சதவீதத்தை 2007 இன் இறுதியில் ஈடுசெய்வதற்கும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வங்கிகள் இத் தேவைப்பாடினை ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளன. எனினும் வங்கிகளுக்கு ஒரு மேலதிகமான கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு வங்கி அடிப்படையில் மூலதனத்தின் பற்றாக்குறையில் 50 சதவீதத்தை 2008 இலும் எஞ்சிய 50 சதவீதத்தை 2009 இலும் ஈடுசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு அத்தகைய வங்கிகள் புதிய திகதிகளின் பிரகாரம் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான நேர வரையறையை கொண்ட

சிறப்புக் குறிப்பு 12

## வங்கிகளின் பங்கு உரிமையாண்மையினுடைய ஒழுங்குபடுத்தல்கள்

வங்கிகள் உயர்ந்தளவான கடன் தன்மை கொண்ட வியாபார நிறுவனங்களாகும், அவற்றினுடைய பிரதான வியாபாரம் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை பெற்றுக் கொள்வதும் அந்த பணத்தினை கடன் வழங்கல் மற்றும் முதலீடு செய்தல் என்பனவாக காணப்படுவதால் அவை குறைந்த மட்டத்திலான மூலதனம் அல்லது பங்குதாரர் நிதியுடன் செயற்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இலங்கை வங்கித்தொழில் முறைமையில் பங்குதாரர் நிதியானது சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுடைய 8 சதவீதத்தினை மட்டும் கொண்டிருக்கும் அதேநேரம் பொதுமக்களிடமிருந்தான வைப்புக்கள் 70 சதவீதமான நிதிகளினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனவே, வைப்பாளர்களுடைய நலன்களை பாதுகாக்கும் பொருட்டும் வங்கித்தொழில் துறையின் நிலையான தன்மையினை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் வங்கிகளின் மூலதனம் அல்லது பங்குதாரர் நிதிகள் பற்றி பல முன்மதிகரமான தேவைப்பாடுகளை பிரயோகிப்பது வங்கி கட்டுப்பாட்டாளர்களின் உலகளாவிய வழமையாக உள்ளது. பங்கு உரிமையாண்மையின் அதிகூடிய மட்டம் அத்தகைய அளவீடாக இருக்கிறது. ஆகக் குறைந்த உரிமை மூலதனம் மற்றும் பாசல் மூலதன ஒப்பந்தத்தின் கீழ் மூலதன போதுமாந்தன்மை என்பன ஏனைய இரண்டு முக்கிய நேரிடக்கூடிய தேவைப்பாடுகள் ஆகும்.

### ஒழுங்குபடுத்தல்களின் பின்னணி

அதிக எண்ணிக்கையுடைய பங்குதாரர்களால் சிறிய பகுதியளவிலான பங்குரிமைகளைக் கொண்ட அதிகளவில் பரவலாக்கப்பட்ட பங்கு உரிமையாண்மையானது நன்மையளிக்கும் என் பொதுவாக நம்பப்படுகிறது. ஏனெனில் இது வங்கியில் பெரிய பங்குதாரரின் கட்டுப்பாட்டை தடுப்பதுடன் வங்கியின் பங்குச்சந்தையில் போட்டித்தன்மையினை ஊக்குவிக்கிறது. எப்படியாயினும் சில வங்கிகள் நிதியியல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு மீள் மூலதனமிடுகை ஊடாக மீள்கட்டமைக்க வேண்டியேற்படும் போது, அவற்றின் பலவீனமான நிதியியல் நிலைமை காரணமாக சந்தையில் நியாயமான விலைகளில் மூலதனத்தை வங்கியால் திரட்ட முடியாமல் போகின்ற வேளையில் சில பங்குதாரர்களால் பெரும்பான்மையான பங்குகளின் உரிமையாண்மையை கொண்டிருக்கின்ற பங்கு உரிமையாண்மை குவிவு அவசியமாக கருதப்படுகின்றது. எனவே வங்கித்தொழில் மற்றும் நிதியியல் முறைமைசார் உறுதித்தன்மையினை ஊக்குவிக்கும் பொருட்டு ஒழுங்குபடுத்துநர்களால் வங்கிகளில் பரவலாக்கப்பட்ட பங்கு உரிமையாண்மை மற்றும் பங்குரிமையாண்மையின் குவிவு என்பன மாற்றுப் பயன்பாடுடையனவாக கருதப்படுகின்றது. வங்கிகளின் நலன்களை கட்டுப்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்களவான உரிமையாண்மையினுடைய மாற்றம் செய்வதற்கான ஏதேனும் பிரேரணைகளை மீளாய்வு செய்வதற்கு மற்றும் நிராகரிப்பதற்கு வங்கி ஒழுங்குபடுத்துனர்கள் அதிகாரம் உடையவர்கள் என செயற்றிறன் வாய்ந்த வங்கித்தொழில் மேற்பார்வைக்கான பாசலின் மைய கொள்கைகளின் (பாசல் நகரிலுள்ள சர்வதேச தீர்ப்பனவிற்காக வங்கியினுடைய பாசல் குழுவால் வங்கி ஒழுங்குபடுத்துநர்களுடைய வழிகாட்டல்களுக்கான பன்னாட்டு அதிசிறப்பு நடைமுறையாக இக்கொள்கைகள் விதந்துரைக்கப்பட்டது) 4வது கொள்கை தேவைப்படுத்துகின்றது. இக் கொள்கைக்கமைய உலகளாவிய ரீதியில் பல்வேறு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுக்கள், அதிகளவான பங்குரிமையால் எழக்கூடிய கூட்டிணைப்பு ஆளுகை தொடர்பிலான இடர்நேர்வுகளை போதுமானளவு குறைக்கக்கூடியதும் அதிகளவான பங்குரிமையினை பெற்றுக் கொண்ட அல்லது வங்கியின் நலன்களை கட்டுப்படுத்துகின்ற நபர்கள் தகுதியான மற்றும் பொருத்தமானவர்கள் என்பதனை உறுதிப்படுத்தி அவர்கள் அதிகூடிய மட்டத்தை விட மேலதிகமான பங்குகளை பெற்றுக் கொள்வதற்காக அனுமதியினை சிபார்சு செய்வதற்கான விதிகள் மற்றும் தேவைப்பாடுகளை குறிப்பிடுகின்ற அதேநேரம் ஒரு வங்கியின் அதிகூடிய பங்குரிமை மட்டத்தை வரையறுக்கிறது. இத்தகைய எல்லைகள் ஒரு தனிப்பங்குதாரரால் (ஒரு தனியாள் அல்லது நிறுவனம்) வைத்திருக்கும் பங்குரிமைகள் மற்றும் நியமனதாரர் அல்லது குழுக்கம்பனிகளூடாக ஒரு தொடர்புடைய பங்குதாரர் குழுவால் வைத்திருக்கும் பங்குரிமை என்பவற்றிற்கு பிரயோகிக்கப்படும். பல நாடுகளில் பல்வேறு முறைகளினூடாக இத்தகைய பங்குரிமையாண்மையின் உயர் அளவு தொடர்பான ஒழுங்கு விதிகள் அமுல்படுத்தப்படுகிறது. அதாவது வங்கியியல் சட்டங்களின் குறிப்பிட்ட விதிகள் இந்த மட்டங்களை குறிப்பிடுகிறது. வங்கித்தொழில் சட்டத்தின் பிரகாரம் ஒழுங்குபடுத்துநர்களால் குறிப்பிட்ட மட்டங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் விநியோகிக்கப்படுகிறது மற்றும் ஒழுங்குபடுத்துநர்களால் அறிவுறுத்தல்கள் விநியோகிக்கப்படுகிறது. எப்படியாயினும் பங்கு உரிமையாண்மையினுடைய ஒழுங்குவிதி தொடர்பில் நாட்டு நடைமுறைகள் வேறான விபரிப்பை காட்டுவதுடன் ஒரு பன்னாட்டு நியம நடைமுறையை பெறுவது கடினமாக உள்ளது. அதிக எண்ணிக்கையான நாடுகள் இத்தகை ஒழுங்குவிதிகளை கொண்டிருக்காமல் உள்ளது. 2003ம் ஆண்டில் உலக வங்கியால் 157 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 112 நாடுகள் (71 சதவீதம் ) வங்கி உரிமையாண்மை பற்றி எத்தகைய கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை. மிதமாகவுள்ள 45 நாடுகள் (29 சதவீதம்) 5 சதவீதம் தொடக்கம் 50 சதவீதம் வரையான எல்லைக்குள் உரிமையாண்மை கட்டுப்பாடுகளை அமுல்படுத்துகிறது. எடுத்துக் காட்டாக பிராந்தியத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### வங்கித்தொழில் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள்

பங்குடமை ஒழுங்குவிதிகளுடன் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ள வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளின்படி, ஒழுங்குபடுத்துநர்களின் ஒப்புதல் இல்லாமல் வர்த்தக வங்கியொன்றில் ஒரு தனிப்பங்குதாரரினால் அல்லது ஒரு தொடர்புடைய பங்குதாரர்குழுவினால் வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கையகப்படுத்தக் கூடிய வாக்குரிமையுடைய பங்குகளின் அதிகூடியளவு விநியோகிக்கப்பட்ட வாக்குரிமையுடைய பங்குகளின் 10 சதவீதமாக உள்ளது. எனினும் வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பு, ஆற்றல் மற்றும் உறுதித்தன்மையினை ஊக்குவிக்கும் பொருட்டும் வங்கித்தொழில் முறைமையின் நியாயமான போட்டித்தன்மையின் வியாபகத் தன்மைக்குமான அத்தகைய கையகப்படுத்தல் காணப்படுமாயின் மற்றும் அத்தகைய கணிசமான நலன்களை கையப்படுத்துகின்ற நபர் அல்லது நபர்கள் தகுதியானவர்களாகவும் பொருத்தமானவர்களாகவும் விளங்கினால் நிதியமைச்சரின் சம்மதத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை 10 சதவீதத்திற்கும் கூடுதலான ஏதாவது பங்குகளினுடைய கையப்படுத்தல்களை அனுமதிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனினும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளைப் பொறுத்த வரையில் பங்குடமைக்காக அத்தகைய சட்ட ரீதியிலான கீழ்மட்டமெதுவும் காணப்படாததுடன் நாணயச்சபை அத்தகைய எல்லைகள் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தினையும் கொண்டுள்ளது.

### இலங்கையின் புதிய கொள்கை

வேறுபட்ட மட்டங்களில் வங்கியின் கணிசமான நலன்களுடைய கையகப்படுத்தல்களிலிருந்து எழுகின்ற சில பிரச்சினைகள் பற்றி தீர்ப்பதற்காக நாணசபையானது வங்கிகளில் பங்குரிமைகளுடைய ஒழுங்குபடுத்தல்களுக்காக 19 சனவரி 2007 அன்று ஒரு புதிய கொள்கை பற்றிய பணிப்புரைகளை வெளியிட்டது. அதன் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:

ஒரு வங்கியினுடைய வாக்குரிமையுடைய வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் உரிமையாண்மையினுடைய அதிகூடிய சதவீதமானது வழங்கப்பட்ட பங்கு

**சிறப்புக் குறிப்பு 12 (தொடர்ச்சி)** **வங்கிகளின் பங்கு உரிமையாண்மையினுடைய ஒழுங்குபடுத்தல்கள்**

மூலதனத்தில் (வாக்குரிமை உடைய) 15 சதவீதமாக அனுமதிக்கப்படுகிறது. இந்த எல்லையானது, நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது நியமனதாரர் ஊடாக அல்லது ஏதாவது ஏனைய வகையான பங்குதாரருடன் இசைந்தியங்குதல் செயற்பாட்டின் மூலம் தனிநபர்கள் அல்லது குழு (வங்கித்தொழில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு) போன்ற எல்லா வகையான பங்குதாரர்களாலும் கையகப்படுத்தும் அல்லது வைத்திருக்கும் பங்குகளுக்கு, பிரயோகிக்க முடியும் எப்படியாயினும் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் விடயத்தில் 10 சதவீதத்திலும் மேலான கையகப்படுத்தலுக்கு நிதி அமைச்சரின் ஒத்திசைவுடன நாணயச்சபையால் வழங்கப்படும் முன் அனுமதி தேவைப்படுத்தப்படுகிறது.

நாணயசபையானது மூலதனத்தின் போதாத தன்மை, கடனிறுக்க முடியாத தன்மை அல்லது நேரிடக்கூடிய தோல்விகள் என்பவற்றைத் தவிர்க்கும் பொருட்டு மீள்கட்டமைத்தல் தேவைப்படும் வேளையில் அனுமதியளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருடத்திலும் அதிகமாகாத நாணய சபையால் விடய அடிப்படையில் வரையறுக்கப்படும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கையகப்படுத்தப்பட்ட அத்தகைய பங்குகளின் உரிமை யாண்மையானது 15 சதவீதத்திற்கு குறைக்கப்படும் என்ற நிபந்தனையுடன் ஒரு அனுமதியளிக்கப்பட்ட வங்கியின் 15 சதவீதத்துக்கும் கூடுதலான பங்குகளைக் கையகப்படுத்துவதற்கு அனுமதி வழங்கலாம்.

நாணயச்சபையின் முன் அனுமதி இன்றி குறிப்பிடப்பட்ட எல்லைக் கோட்டை (வர்த்தக வங்கிகளுக்கு 10 சதவீதம் மற்றும் விசேட வங்கிகளுக்கு 15 சதவீதம்) விட மேலதிகமாக ஒரு வங்கியின் பங்குகளை கையகப்படுத்தும் ஏதாவது பங்குதாரர்களின் பெயர்கள் வங்கியின் பங்கு பதிவேட்டில் பதிவு செய்யப்படக்கூடாது.

15 சதவீதத்திலும் கூடுதலான வாக்குரிமை உடைய பங்குகளை தற்போது வைத்திருக்கும் அனைத்து பங்குதாரர்களும், நாணயச்சபையால் விடய அடிப்படையில் குறிப்பிடும் ஐந்து வருடத்துக்கும் மேற்படாத காலப்பகுதியில் தமது பங்குகளை 15 சதவீத அளவிற்கு விற்பதற்கு அத்துடன்/ அல்லது குறைப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். பங்குதாரர்களில் ஏதாவது வகையினர் இதனுடன் இசைந்து செல்லத் தவறுவார்களாயின் அவர்களின் வாக்குரிமை 10 சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படும்.

**சிறந்த கூட்டிணைப்பு ஆளுகைக்கான தேவை**

எப்படியாயினும், பணிப்பாளர் நியமனத்தின் ஊடாக ஒரு வங்கியின் முகாமைத்துவத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடிய பங்குதாரர்களின் நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற எல்லா பிரச்சனைகளையும் ஒழுங்குபடுத்தல்களால் மாத்திரம் தீர்க்க முடியாது. உதாரணமாக, நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளின் கீழ் பத்து பங்குதாரர்கள் ஒரு வர்த்தக வங்கியை சொந்தமாக வைத்திருக்க முடிவதுடன் (ஒவ்வொருவரும் சட்டரீதியாக அனுமதியளிக்கப்பட்ட 10 சதவீதத்தை கொண்டிருத்தல் வேண்டும்). பணிப்பாளர் சபையினை நியமிக்கலாம், அத்துடன் முகாமைத்துவத்தில் செல்வாக்கு செலுத்தவும் முடியும். இந்நிலைமை சட்ட ரீதியானாலும், சில பங்குதாரர்களால் உடமையானது குவிப்புக்குள்ளாக்கப்பட்டிருப்பதாக கருதிக்கொள்ள முடியும். மேலும் அத்தகைய பங்குதாரர்கள் ஏனைய வங்கிகளின் பங்குகளை அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் கொள்வனவு செய்வதுடன் வங்கித்தொழில் துறையுள் அவர்களின் நிலையை ஒன்று திரட்டிக் கொள்ள முடியும். எனவே பங்கு உரிமையாண்மையுடன் தொடர்புடைய சாத்தியமான முகாமைத்துவ பிரச்சனைகளை தடுப்பதற்கு, நவீன கூட்டிணைப்பு ஆளுகை கொள்கைகளை செயற்திறன் வாய்ந்தளவில் அமுல்படுத்துவதே தேவைப்படுத்தப்பட்ட ஒன்றாக உள்ளது. பங்குதாரர்கள் அவர்களுடைய வங்கி விவகாரங்களில் அக்கறையுடையவர்களாக உள்ளனர் என்பது உண்மையாகும். மிக முக்கியமாக வைப்பாளர்கள் மற்றும் கடன்கொடுனர்கள் வங்கிகள் மீது அக்கறை கொண்டுள்ளனர் மற்றும் வங்கிகளின் உறுதித்தன்மை என்பது வங்கிகளில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளிலேயே தங்கியுள்ளது. பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் ஆகிய அனைத்து அக்கறையுடைய தரப்பினரதும் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு நிறுவனங்கள் அவர்களுடைய நடவடிக்கையை வெளிப்படையாகவும் கணக்களி தகமையுடையனவகாகவும் முகாமை செய்ய வேண்டுமென நவீன கூட்டிணைவு ஆளுகைக் கொள்கைகள் தேவைப்படுத்துகின்றன.

2002 யூனில் மத்திய வங்கியானது, வங்கிகளின் சுயவிருப்பில் இணைந்து நடப்பதற்கான கூட்டிணைப்பு ஆளுகையுடைய நியதி ஒன்றை வெளியிட்டது. சிறந்த கூட்டிணைப்பு ஆளுகைக் கொள்கைகள் உலகளாவிய ரீதியில் கூட்டிணைப்புத்துறையினருக்கு நன்கு அறியப்பட்ட ஒன்றாக உள்ளது. எனவே ஒழுங்குபடுத்துனர்களால் பிரயோகிக்கப்பட்ட கூட்டிணைப்பு ஆளுகை விதிகள் என்றல்லாமல், வங்கிகளால் இத்தகைய கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எப்படியாயினும் மத்திய வங்கி அதனது உள்ளூர் மற்றும் பன்னாட்டு வங்கித்தொழில் துறையின் அண்மைய அபிவிருத்தியைக் கருத்திங்கொண்டு 2007ஆம் ஆண்டுக்கானதும் அதற்கு அப்பாலுக்குமான வழிகாட்டல்களில் சட்டரீதியான கூட்டிணைவு ஆளுகை நியதிகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படுமென அறிவித்திருந்தது..

மூலதனமிடல் திட்டத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

**2006இன் இறுதியில் கொடுகடன்களுக்கான ஒரு பொது ஏற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது.** சகல வங்கிகளும் அதன் மொத்த செயற்படும் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் காலம் கடந்த வகைக்குள் உள்ள செயற்படா கொடுகடன்கள் (3 தொடக்கம் 6 மாதம் வரையில் தவணைப்பணம் திருப்பிச் செலுத்தாத கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்) என்பவற்றிற்கு 1 சதவீத பொது ஏற்பாடு ஒன்றைப் பேணவேண்டும். இத்தேவைப்பாடானது 2006 இறுதி காலாண்டிலிருந்து ஆரம்பிக்கும் பத்து வார காலாண்டுப்பகுதியில் படிப்படியாக அமுல்படுத்தப்படும்.

**பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளுடன் தொடர்புடைய முன்மதிகரமான நியமங்கள் புதிய ஆகக்குறைந்த மைய மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றினுடைய பிரயோகம் மூலம் மேலும் வலுவாக்கப்பட்டது.** இத்தகைய பணிப்புரைகளின் நியதிகளின்படி நிதிக்கம்பனிகள் மதிப்பிறக்கத்துக் குள்ளாகாத மைய மூலதனமாக ரூ.200 மில்லியனை 2008 யூனில் (2007 பெப்புருவரியில் 100 மில்லியன்) பேணுவதுடன் 10 சதவீத இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தையும் பேணல் வேண்டும்.

**ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேம்படுத்தும் பொருட்டு பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கு மேலும் பல பணிப்புரைகள் வழங்கப்பட்டன.** முன்மதியுடைய தேவைப்பாடுகளை கொண்டமைந்த அறவிடமுடியாக்கடன் ஏற்பாடுகள், முதலீடுகள், தனிநபர் கடன்பாட்டு எல்லைகள், தொடர்புடைய தரப்பினருக்கான கடன்கள், பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள், நிதிக் கூற்றுக்களை பிரசுரித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் மற்றும் கிளைக்காரியாலய விரிவாக்கம் என்பன தொடர்பிலான பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

**2006இல் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின்**

சிறப்புக் குறிப்பு 13

## நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் சட்டத்தின் வரைபு

இலங்கையில், கிராமிய கூட்டுறவு வங்கிகள், சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்கள், சமுர்த்தி வங்கியியல் சங்கங்கள், சர்வோதய அபிவிருத்தி நிதி நிலையங்கள் மற்றும் பல அரசசார்பற்ற அமைப்புக்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட அமைப்புக்கள் நுண்பாக நிதியிடல் பணிகளில் ஈடுபடுகின்றன. இதன் ஒரு பெறுபேறாக இத்துறைக்கான ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிக்கும் செயல்முறை ஒன்றின் உருவாக்கம் என்பது ஒரு நீண்ட கால தேவையாக இருந்து வந்துள்ளது. வறிய மற்றும் பலவீனமான நிலையிலுள்ள நபர்களின் நிதியை தம்மிடம் வைத்திருப்பவை என்ற வகையில் நுண்பாக நிதியிடல் நிறுவனங்களை ஒழுங்குபடுத்ததல் என்பது கட்டாயமாக இருக்கும் அதே வேளையில் இவர்கள் தமது சேமிப்புக்களை இழப்பார்களாயிருந்தால் வறுமையினால் அவர்கள் மேலும் பாதிக்கப்படுவதனையும் தவிர்க்க முடியாது போகும். மேலும் வறியவர்கள் நிதி முறைமையின் மீதுள்ள நம்பகத்தன்மையினை இழப்பதால் அவர்களின் சேமிப்பு நடவடிக்கைகளில் ஒரு பின்னடைவு ஏற்படும். அத்துடன் நுண்கடன் துறையானது தேவையான அளவு பெரியதாக இருக்கும் போது நுண்பாக நிதியிடல் நிறுவனங்களினது தோல்வியானது நிதிமுறை உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே ஒழுங்குபடுத்துதல் என்பது ஒரு பக்கத்தில் வைப்பாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கும் மறுபக்கத்தில் திறமையான, நடைமுறைச்சாத்தியமான மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய நுண்பாக நிதியிடல் நிறுவன துறையின் அபிவிருத்திக்கும் அவசியமாகும்.

இவற்றினைக் பரிசீலனையில் கொண்டு, சில ஆண்டுகளுக்கு முன்னர் கிராமிய நிதித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது கிராமிய துறை நிதி நிறுவனங்களினை ஒழுங்குபடுத்தும் செயன்முறை ஒன்றினை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டது. சுனாமிக்குப் பின்னரான அண்மிய காலத்தில் குறிப்பாக சுனாமிக்குப் பின்னரான ஜீவனோபாய அபிவிருத்தி உள்ளடங்கலாக மீள்கட்டுமான மற்றும் புனரமைப்பு சேவைகளுக்காக கூடிய அளவிலான நிதிகள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைத்திருந்ததுடன் நுண் நிதியிடல பணிகளில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் எண்ணிக்கையும் விரைவாக வளர்ச்சி கண்டது. இதன் விளைவாக இவ்வாறான அமைப்புக்களுக்காக, விரும்பிய இலக்கினை அடையக்கூடிய வகையில் வளங்களின் திறமையான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்தல் செயன்முறையொன்றின் உருவாக்கம் என்பது முக்கியம் பெற்று இதுவே நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் சட்டத்தின் உருவாக்கத்திற்கான பின் சூத்திரமாக இருந்தது.

இச்சட்டத்தின் நோக்கில் நுண்பாக நிதியியல் வியாபாரம் என்பது "வைப்புக்களை அல்லது பெறுவனவுகளை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அல்லது வெளியிலிருந்து நிதிகளை பெற்றுக் கொள்வதுடன் குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கும் சிறிய மற்றும் நுண் முயற்சியாளர்களுக்கும் எந்த வகையிலான நிதி கடன்களையும் ஏனைய நிதிச் சேவைகளையும் வழங்குதல்" என வரையறுக்கப்படுகின்றது. இச்சட்டமானது கீழ்வரும் 14 பகுதிகளின் கீழ் 53 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

பகுதி I ஆனது, நுண்பாக நிதியிடல் பணியினை அனுமதியின்றி முன்னெடுத்தல் அல்லது நடைமுறைப்படுத்தலினை தடை செய்கின்றது. இருப்பினும் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், அனுமதியளிக்கப்பட்ட சிறப்புரிமை வாய்ந்த வங்கிகள், நிதிக் கம்பனிகள், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கியின் நாணயச் சபையின் அங்கீகாரத்துடன் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களிடம் மட்டும் இருந்து வைப்புக்களை ஏற்கும் இலாபநோக்கற்ற நிறுவனங்கள் போன்ற பல்வகைப்பட்ட நிறுவனங்கள் அனுமதி பெறும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலுள்ள சில தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என கேட்கப்படுகின்றன. நுண்பாக நிதியிடல் பணியினை முன்னெடுக்கும் அனைத்து அமைப்புக்களும், சட்டமானது நடைமுறைக்கு வந்து 2 வருடத்தினுள் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதுடன் சட்டம் நடைமுறைக்கு வந்து 6 மாத காலத்தினுள் தமது பெயர், முகவரி மற்றும் ஏனைய தகவல்கள் போன்றவற்றைச் சமர்ப்பிப்பதுடன் குறிப்பிட்ட 2 வருட காலத்தினுள் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ளும் நோக்கம் உள்ளதா என்பதனையும் வெளிப்படுத்துதல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கான தகைமையை பெறுவதற்கு நிறுவனமானது ஒரு பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட பகிரங்க கம்பனியாக இருத்தல் வேண்டும் என வேண்டப்படுகின்றது. மேலும் சட்டமானது நுண்பாக நிதியிடல் நிறுவனங்கள், தேசிய மட்டம், மாகாண மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் பிரதேச செயலக மட்டம் ஆகிய 4 வேறுபட்ட மட்டங்களில் செயற்படுவதற்கு அங்கீகாரமளித்துள்ளதுடன் ஒவ்வொரு மட்டங்களிலும் செயற்படுவதற்கான குறைந்த

**அட்டவணை சி.13.1**
**முன்மொழியப்பட்ட நுண்பாக நிதியியல் சட்டத்தின் அமைப்பு**

| | |
|---|---|
| பகுதி I | நுண்பாக நிதியிடல் நிறுவனங்களை அனுமதித்தல் |
| பகுதி II | அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான நாணயச்சபையின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் |
| பகுதி III | மேற்பார்வை செய்வதற்கான தொடர்புடைய அதிகாரங்கள் |
| பகுதி IV | பணிப்புரைகளை வழங்கும் அதிகாரம் |
| பகுதி V | அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதி நிறுவனங்களின் முகாமைத்துவம் |
| பகுதி VI | நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வுகளின் ஏற்பாடு |
| பகுதி VII | ஆவணங்கள் மற்றும் தகவல்களிற்கான ஏற்பாடு |
| பகுதி VIII | அனுமதி பெறாது நுண்பாக நிதியிடல் பணியினை மேற்கொள்பவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை மற்றும் பாதுகாப்பு அதிகாரம் |
| பகுதி IX | அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதி நிறுவனங்களை பரிசோதிப்பதற்கான அதிகாரம் |
| பகுதி X | வைப்புக்களை பாதுகாத்தல் |
| பகுதி XI | நுண்பாக நிதியியல் நிறுவனமொன்றின் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்தல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் |
| பகுதி XII | சட்ட பாதுகாப்பு |
| பகுதி XIII | குற்றங்கள் |
| பகுதி XIV | ஏனையவை |

**சிறப்புக் குறிப்பு 13 (தொடர்ச்சி)**

**நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் சட்டத்தின் வரைபு**

மூலதனத் தேவைப்பாடுகளையும் குறித்துரைக்கின்றது. தேசிய மட்டத்தில் செயற்படுவதற்கான மைய மூலதன தேவையாக ரூ.50 மில்லியன் தேவைப்படுத்தப்படுகின்றது.

சட்டத்தின் பகுதி III இன்படி அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை செய்யும் பொறுப்புக்கான அதிகாரத்தினை மத்திய வங்கியின் சபையினால் நுண்பாக நிதியிடல் விடயங்கள் ஒதுக்கப்பட்ட திணைக்கள பணிப்பாளருக்கு வழங்கியது. சபையானது இந்த விடயத்தினை வங்கியல்லாத நிதி நிறுவன மேற்பார்வை திணைக்களத்திற்கு ஒதுக்குவது என தீர்மானித்தது. மேலும் இந்தப் பகுதியானது நுண்பாக நிதியிடல் நிறுவனங்களின் மேற்பார்வைக்காக முகவர்களை நியமிப்பதனை அனுமதித்தது.

அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் முகாமைத்துவம் தொடர்பாக பகுதி I ஆனது, அவ்வாறான முகாமைத்துவம் குறிப்பிட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அல்லது அதற்கு ஈடான ஒன்றிற்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும் என தேவைப்படுத்துகின்றது.

அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புச் சொல்லும் தன்மை என்பன தொடர்பான முக்கிய விடயமாக, ஒவ்வொரு அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் நிறுவனங்களும் ஐந்தொகை, இலாப நட்டக் கணக்கு, ஒவ்வொரு நிதியாண்டுக்குமான காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றினை தயாரிக்க வேண்டும் என பகுதி II இல் தேவைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சட்டத்தின் குறைந்த பட்ச தேவைப்பாட்டு நிபந்தனையாகவும் உள்ளது. நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் இவ்வகையான நிதி கூற்றுக்களை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து 5 மாத காலத்தினுள் பிரசுரிக்க வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றது.

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளரின் ஏதாவது பொருத்தமான தகவலைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் பகுதி VII இல் அனுமதியளிக்கப்பட்டுள்ள அதேவேளை பகுதி VIII ஆனது அனுமதிப்பத்திரமின்றி நுண்பாக நிதியியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அமைப்புகளுக்கு தண்டப்பணம் விதிப்பதற்கும் அனுமதிக்கின்றது. தண்டப் பணமானது இங்கு ஒரு மில்லியன் ரூபாய்களுக்கு மேற்படாத குற்றப்பணமாக நிபந்தனையிடப்பட்டுள்ளது.

சட்டத்தின் மற்றைய முக்கியமாக விடயமாக அனுமதியளிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் நிறுவனங்கள், வைப்புக்களை பாதுகாக்கும் நிதியொன்றினை பராமரிக்கும்படி தேவைப்படுத்தப்படுவதுடன் வைப்பு காப்புறுதி மூலம் வைப்பாளர்களை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. (பகுதி X) மேலும் சட்டமானது நுண்பாக நிதியிடல் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்ய அல்லது தற்காலிகமாக இடை நிறுத்தி வைப்பதற்கு சபைக்கு அதிகாரமளித்ததுடன் (பகுதி XI) சபை, பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களம் மற்றும் இது தொடர்பாக நம்பிக்கையுடன் நடந்து கொண்ட ஏனைய நபர்களுக்கு சட்டப் பாதுகாப்பினை வழங்குகின்றது (பகுதி XII).

நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் சட்டமானது சட்டப்பத்திரங்களை தயாார்ப்படுத்துபவர்களால் தற்போது இறுதியாக்கப்பட்டிருப்பதுடன் இது 2007ஆம் ஆண்டு சட்டமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள், தனியார் கடன்பாட்டு எல்லை, ஒதுக்கு நிதித் தேவைப்பாடுகள், நிதிக் கூற்றுக்களை தயார் செய்தல் மற்றும் கம்பனி மற்றும் தொழிற்பாட்டு தகவல்களை அறிக்கையிடல் என்பவற்றை உள்ளடக்கி பல்வேறு முன்மதியுடைய நியமங்கள் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. இத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கியொழுகல் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளுடைய உறுதித்தன்மை மற்றும் நிதியியல் ஒழுக்கங்களை குறிப்பிடத்தக்களவில் மேம்பாடடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தலத்திலான பரீட்சிப்புக்களினூடாகவும், தலத்துக்கு வெளியிலிருந்தான கண்காணிப்புக்கூடாகவும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்படுகின்றன.

**நுண்பாக நிதித்துறையின் முக்கிய அபிவிருத்தியாக மத்திய வங்கியால் உத்தேசிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் நிறுவன சட்டத்தினை உருவாக்குவதில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாடு காணப்பட்டது.** நல உரித்துக் கொண்ட அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களும் கவனத்தில் எடுக்கப்பட்டு வரைபுச் சட்டமானது பல தடவைகள் மீளாய்வுக்கு உட்பட்டதுடன் இது 2007இல் இறுதியாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சட்டம் இயற்றப்பட்டவுடன் அது நுண்பாக நிதி நிறுவனங்களுக்கான ஒரு ஆற்றல் தன்மை வாய்ந்த ஒழுங்குமுறைப்படுத்தல் முறைமையை ஏற்படுத்தும். இத்துறையினுடைய பரந்தளவிலான வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் தன்மை என்பன நுண்பாக நிதித் துறையில் உதவி வழங்குனர்களின் அதிக நம்பிக்கையை உருவாக்குவதுடன் இத்துறைக்கு அதிக நிதிகள் பாய்ச்சலுக்குள்ளாவதை ஊக்குவிக்கும்.

**மத்திய வங்கியானது சட்ட பூர்வமற்ற வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் பிரமிட், பல்வகை மட்ட சந்தைப்படுத்தல்** மற்றும் ஏனைய அனுமதியளிக்கப்படாத திட்டங்களில் முதலிடுவதினுடைய அபாயகரத்தன்மை பற்றி பொதுமக்களை எச்சரிப்பதற்காக தொடர்பான பல விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டுவந்தது.

**காப்புறுதித்துறையினுடைய மேற்பார்வையை வலுப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்ட காப்புறுதி சட்டத்துக்கான திருத்தங்கள் 2006ல் இறுதியாக்கப்பட்டது.** இத்திருத்தங்களானது, காப்புறுதி கம்பனிகளுக்கான ஆகக் குறைந்த பங்கு மூலதனத்தை வரையறுத்தல், விதிகள் மற்றும் வரைமுறைகளை உருவாக்குதல் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகாமைக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள காப்புறுதி சபைக்கு அதிகாரமளிக்கிறது. ஏனைய ஏற்பாடுகள் காப்புறுதி கம்பனிகளின் பணிப்பாளர்கள் மற்றும் தரகர்கள் என்போரின் தகுதி மற்றும் பொருத்தமான தன்மை பற்றிய நியமத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் கம்பனி முகவர்கள் மற்றும் இழப்பு சீராக்குனர்களின் நியமனம் என்பன தொடர்பானதாக காணப்படுகின்றன. துறைசார் ரீதியிலான ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வினைக் குறைப்பதற்கு காப்புறுதி திருத்தச் சட்டத்தினை சட்டமாக்குதல் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**முதனிலை வணிகர்கள் முறைமையினுடைய உறுதித்தன்மையை அதிகரித்தல் மற்றும் இடர்நேர்வுகளை குறைத்தல் என்பவற்றிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.** ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள் ரூ.250 மில்லியனிலிருந்து ரூ.300 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. அத்துடன் இடர்நேர்வு நிறையளிக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. சகல முதனிலை வணிகர்களும் அதிகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம் மற்றும் இடர்நேர்வு நிறையளிக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றுடன் இணங்கியொழுகினர்.

## கொடுகடன் தரமிடல் மற்றும் கொடுகடன் தகவல்

**2006ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசாங்கத்தினுடைய நாட்டுக்கான தரமிடல் கடந்த ஆண்டில் உள்ளதைப் போல் அதே மட்டத்தில் பேணப்பட்டது.** பிச் றேட்ரிங் ஆனது ஒரு நீண்டகால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய தரமிடலாக "பிபி - " (பிபி மைனஸ்) இனை வழங்கியுள்ளது. அதே நேரம் ஸ்ரான்டட் அன்ட் புவர்ஸ் "பி +" (பி பிளஸ்) தரமிடலை வழங்கியுள்ளது. இலங்கையின் நாட்டுக்கான தரமிடலானது வியட்நாம், இந்தோனேசியா, பிரேசில் மற்றும் துருக்கி போன்ற ஏனைய நாடுகளின் தரமிடலை ஒத்ததாக உள்ளது. இலங்கையில் தொழிற்படும் கொடுகடன் தரமிடல் முகவராண்மைகளுடைய எண்ணிக்கை 2006இலும் அதே இரண்டாகவே மாற்றமின்றிக் காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கியானது வைப்புக்களை ஏற்கும் சகல நிறுவனங்களுக்கும் (உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்) அந் நிறுவனங்களுடைய இயலளவு மற்றும் நிதியியல் செயற்றிறன் என்பவற்றை மதிப்பிட்டுக் கொள்வதற்கு வைப்பாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் உதவியளிப்பதற்கும் நிதியியல் முறைமையின் நம்பகத்தன்மை மேலும் விருத்தி செய்வதற்குமென சுதந்திரமான தரமிடல் முகவராண்மைகளிடமிருந்து ஒரு கொடுகடன் தரமிடலை பெற்று அதை பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என தேவைப்படுத்துகிறது. 2006 இல் 23 வர்த்தக வங்கிகளில் 20 வங்கிகளும் 14 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் 12 வங்கிகளும் முதலீட்டு தரமிடலை பெற்றுக் கொண்ட அதேநேரம் 29 நிதிக்கம்பனிகளில் 26 கம்பனிகள் தரமிடலைப் பெற்றுக் கொண்டன.

## கொடுகடன் தகவல்

**கடன் பெறுநர்கள் பற்றிய கொடுகடன் தகவல் அறிக்கைகளை வழங்குகின்ற கொடுகடன் தகவல் பணியகத்தால் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை பதிவு செய்தது.** 2005 இன் 607,990 கொடுகடன் அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 2006 இல் கொடுகடன் தகவல் பணியகமானது கம்பனிகள் மற்றும் தனியார் கடன்படுநர் தொடர்பில் 801,508 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. கடன் வழங்கும் நிறுவனங்களின் கொடுகடன் மதிப்பீட்டு செய்முறையின் முக்கிய ஒரு பகுதியாக கொடுகடன் அறிக்கை காணப்படுவதால் தனியார் துறைக்கான கொடுகடன்களுடைய அதிகரிப்பு கொடுகடன் அறிக்கைகளுக்கான கேள்வியில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. கொடுகடன் தகவல் பணியகமானது வர்த்தக மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் என்பவற்றிலிருந்தான ரூ. 500,000 மற்றும் அதற்கு மேற்பட்ட கிரமமான மற்றும் கிரமமற்ற முற்பணங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் கொடுகடன் அட்டைகள் தொடர்பில் ரூ.5,000 மற்றும் அதற்கு மேற்பட்ட 90 நாட்களுக்கு மேற்பட்ட செலுத்தப்படாத மீதிகளின் விபரம் தொடர்பான விபரங்களை தற்போது சேகரிக்கிறது. கொடுகடன் தகவல் பணியகத்துக்கு அறிக்கையிடப்பட்ட கிரமமான முற்பணங்களின் எண்ணிக்கை 2005ஐக் காட்டிலும் 38 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் கிரமமற்ற முற்பணங்களின் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையானது 2006இல் 56 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

**கொடுகடன் தகவல் பணியகத்தினுடைய உள்ளடக்கங்களை விருத்தி செய்தல் மற்றும் நோக்கங்களை விரிபடுத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் போன்றவற்றிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.** கொடுகடன் தகவல் பணியகத்தின் கொடுகடன் தகவல் அறிக்கைகளை நேரடியாகவே பார்வையிடக்கூடிய வசதிகளை வழங்குவதற்கான நவீனமயமாக்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், கொடுகடன் புள்ளியிடல், மோசடிகளை தடுத்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற பெறுமதிசேர் பணிகளை வழங்குவதற்கும் பல தரப்பட்ட பயன்பாட்டு குழுக்களுக்கு பணிகளை வழங்குவதற்கும் கொடுகடன் தகவல் பணியகத்தை இயலச் செய்யக் கூடிய வகையில் கொடுகடன் தகவல் பணியக சட்டத்திற்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

## 8.6 நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

**2006 இல் நிதியியல் முறைமையானது தொடர்ந்தும் தாக்கு பிடிக்கும் திறன், மீண்டெழும்தன்மை மற்றும் உறுதித்தன்மை கொண்டனவாக காணப்பட்டது.** இதற்கு உறுதியான பொருளாதார வளர்ச்சி, நிதியியல் பணித்துறையினுடைய விரிவாக்கம், முக்கிய நிதியியல் நிறுவனங்களின் ஆற்றல் தன்மை மற்றும் இலாபங்களின் அதிகரிப்பு மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் பாதுகாப்பான தொழிற்பாடுகள் என்பன உதவியளித்தன. குறுங்காலத்தில் நிதியியல் முறைமையிலான இடர்நேர்வு தொடர்ந்தும் குறைவானதாகவே காணப்பட்டது.

**இவ்வாண்டுக்காலப்பகுதியில் முக்கிய நிதியியல் நிறுவனங்களின் உறுதிப்பாடு மேம்பாடடைந்தது.** வங்கித்தொழில்துறை மற்றும் நிதிக் கம்பனிகளின் நிதியியல் செயற்றிறன், இலாபத்தன்மை, சொத்து தரம் மற்றும் மூலதன மட்டங்கள் ஆகிய நியதிகளில் மேம்பாடடைந்துள்ளன. வங்கிகளால் எதிர்நோக்கப்படும் முக்கிய இடர்நேர்வான கொடுகடன் இடர்நேர்வானது செயற்படாக் கொடுகடன்களின் வீழ்ச்சியுடன் தொடர்ந்து கட்டுப்படுத்தக்கூடிய மட்டத்தில் காணப்படுகின்றது. அதிகரித்துச் செல்லும் வட்டி வீதச் சூழலில் வங்கித்தொழில் துறையானது சந்தை இடர்நேர்வுகளால் பாதகமான தாக்கத்திற்குள்ளாகவில்லை. திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவமும் திருப்திகரமாகவே காணப்பட்டது. நிதியியல் நிறுவனங்களுடைய மூலதன மட்டங்கள் மற்றும் மூலதனப் போதுமை விகிதங்கள் என்பன குறிப்பிடத்தக்களவு அதிகரித்து அவற்றின் ஆரோக்கியதன்மை மற்றும் உறுதிப்பாடு என்பன மேம்பட்டுள்ளதனை

**அட்டவணை 8.10** முறைசார் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்களின் ஆற்றல் வாய்ந்த குறிகாட்டிகள்

சதவீதம்

| நிறுவனமும் குறிகாட்டியும் | 2005 (அ) | 2006 (ஆ) |
|---|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| மொத்தக் கடன்களில் செயற்படாக் கடன்கள் | 6.8 | 5.4 |
| மூலதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 16.5 | 12.6 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் | 12.8 | 11.7 |
| சொத்து மீதான வருவாய் | 1.7 | 1.8 |
| பங்கு மீதான வருவாய் | 16.8 | 18.5 |
| மொத்த வருமானத்திற்கான வட்டிமிகை | 38.4 | 37.6 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 33.7 | 31.9 |
| நியதித் திரவ விகிதம் (உ.வ.தொ. பிரிவுகள்) | 24.2 | 23.9 |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | | |
| மொத்தக் கடன்களில் செயற்படாக் கடன்கள் | 8.8 | 7.3 |
| மூலதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 21.1 | 22.9 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் | 20.0 | 20.3 |
| சொத்து மீதான வருவாய் | 2.5 | 2.0 |
| பங்கு மீதான வருவாய் | 15.3 | 12.6 |
| மொத்த வருமானத்திற்கான வட்டிமிகை | 37.5 | 36.1 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 17.8 | 18.1 |
| நியதித் திரவ விகிதம் | 69.4 | 61.8 |
| **நிதிக் கம்பனிகள்** | | |
| மொத்தக் கடன்களில் செயற்படாக் கடன்கள் | 8.4 | 5.3 |
| மூலதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 15.5 | 9.4 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் | 17.4 | 15.0 |
| சொத்து மீதான வருவாய் | 2.9 | 2.5 |
| பங்கு மீதான வருவாய் | 17.6 | 17.0 |
| மொத்த வருமானத்திற்கான வட்டிமிகை | 29.3 | 33.0 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 38.7 | 31.0 |
| நியதித் திரவ விகிதம் | 18.6 | 16.9 |

(அ). திருத்தப்பட்டவை
(ஆ). தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

8 நிதியியல்துறை அபிவிருத்திகளும் முறைமை உறுதித்தன்மையும்

**சிறப்புக் குறிப்பு 14**

## நிதியியல் குழுமங்களின் கண்காணிப்பு

**நிதியியல் குழுமங்கள் என்றால் என்ன?**

ஒரு நிதியியல் குழுமம் என்பது பொதுவாக வங்கித்தொழில், நிதி, காப்புறுதி மற்றும் பிணையங்களின் வர்த்தகம் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது ஏதாவது இரண்டு வேறுபட்ட நிதியியல் துறைகளில் நிதியியல் சேவை வியாபாரங்களில் ஈடுபடுவதுடன் ஏதாவது ஒரு துறையில் ஒரு முக்கியமான பங்குபற்றலை கொண்ட நிறுவனங்களின் ஓர் குழு அல்லது ஒரு பிடிப்புக் கம்பனியை குறிக்கிறது. நிதியியல் நிறுவனங்கள் தங்களின் பாரம்பரிய சிறப்புத்தன்மை வாய்ந்த செயற்பாடுகளை பன்முகப்படுத்தியதிலிருந்து நிதியியல் குழுமங்கள் விருத்தியடைய ஆரம்பித்தன. தொழில்நுட்பப் புதிதுபுனைதல், தேசிய நிதியியல் சந்தைகளின் தாராளமயமாக்கல் மற்றும் நாடுகளுக்கிடையிலான சட்ட மற்றும் வியாபார தடைகளின் நீக்கம் என்பன சிக்கலான முகாமைத்துவம் மற்றும் கூட்டிணைப்பு கட்டமைப்புக்களுடன் கூடிய பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் குழுமங்களின் அபிவிருத்தியை ஊக்குவித்தன. மேலும் அநேகமான குழுமங்கள் உலகளாவிய வியாபார தொடர்புகளுடன் நிர்வகிக்கப்படுவதுடன் சட்ட ரீதியான நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகளை ஊடறுத்து செல்லும் நோக்கத்தில் குழுவிற்குள் உள்ள வேறுபட்ட நிறுவனங்களுக்கிடையில் காணப்படும் அவற்றின் பிரதானமான இடர்நேர்வுகள் எல்லாவற்றையுமோ அல்லது சிலவற்றையோ முகாமை செய்கிறது. உலகளாவிய ரீதியில் வங்கித்தொழில், பிணையங்கள் மற்றும் காப்புறுதி சேவைகளை உள்ளடக்கிய நிதியியல் சேவைகளினை வழங்குகின்ற இத்தகைய நிதியியல் குழுமங்களின் வேகமான விருத்தியானது, இத்தகைய நிறுவனங்களை முகாமை செய்பவர்கள் மற்றும் குழுமங்களுக்கிடையிலான இத்தகைய நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான பொறுப்பு வாய்ந்த மேற்பார்வையாளர்கள் ஆகிய இருவருக்கும் கணிசமான சவால் நிறைந்ததாக காணப்படுகிறது.

**இலங்கையில் நிதியியல் குழுமங்கள்**

மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆரம்ப கற்கையின் பிரகாரம், அனைத்து நிதியியல் நிறுவனங்களின் சொத்துக்களின் 68 சதவீதமானவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 1,896 பில்லியன் பெறுமதியான சொத்துக்களுடன் 141 நிறுவனங்களூடாக செயற்படுத்தும் அத்தகைய 11 குழுமங்கள் இனங் காணப்பட்டுள்ளன. தனிப்பட்ட குழுமங்களின் சொத்துக்கள், குழுமங்களின் மொத்த சொத்துக்களுடைய 3 சதவீதத்திலிருந்து 18 சதவீதம் வரையான எல்லைக்குள் காணப்படுகின்றன. வங்கித்தொழில் வியாபாரத்தில் கணிசமான பங்களிப்பைக் கொண்ட ஆறு குழுமங்கள் மொத்த சொத்துக்களின் 81 சதவீதத்தை வைத்திருக்கும் அதேநேரம் 46 சதவீத சொத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இக்குழுமங்களில் மூன்று அரசாங்கத்தின் உடமையாக உள்ளது. இனங் காணப்பட்ட 141 நிறுவனங்களில் 69 நிறுவனங்கள், மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி சபை ஆகிய மூன்று நிதியியல் ஒழுங்குபடுத்துநர்களில் எந்தவொருவராலும் ஒழுங்குபடுத்தலுக்கு மற்றும் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படவில்லை. எப்படியாயினும் அத்தகைய நிறுவனங்களின் சொத்துக்கள் அனைத்து குழுமங்களினதும் மொத்த சொத்துக்களின் 7 சதவீதத்தை மாத்திரமே கொண்டுள்ளது. நிதியியல் முறைமையிலுள்ள குறிப்பிடத்தக்களவான பங்கு மற்றும் முறைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுடனான தொடர்புகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நிதியியல் குழுமங்கள் முறைசார் முக்கியத்துவம் உடைய முயற்சிகளாக விளங்குகின்றன.

**நிதியியல் குழுமச் செயற்பாடுகளுடைய மேற்பார்வை விடயங்கள்**

- **குழுவிற்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் அல்லது தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்:** தற்போதைய வியாபார உலகில் குழுவிற்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகளானது வினைத்திறன் வாய்ந்த செலவுக் கட்டமைப்புகள், இலாப உச்சப்படுத்தல்கள், இடர்நேர்வு முகாமைத்துவத்தின் முன்னேற்றங்கள் மற்றும் மூலதனம் மற்றும் நிதியிடலுடைய வினைத்திறன் வாய்ந்த கட்டுப்பாடுகளுடன் செயற்படுத்துவதன் மூலம், குழுமத்தில் உள்ள வேறுபட்ட நிறுவனங்களுக்கிடையில் மேலதிக செயற்றிறனுக்கு உதவ முடியும். எப்படியாயினும் பெருந்தொகையளவிலான குழுவிற்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் குழுமத்திற்கிடையில் பரவிச் செல்லும் மூலமாக காணப்படுவதுடன் அவை தீர்ப்பதற்கு குழப்பகரமானவையாகவோ அல்லது நிறுவனங்களின் தோல்விக்கோ இட்டுச் செல்லக்கூடிய நேரிடைகளைக் கொண்டுள்ளது. குழுவிற்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகளானது ஒரு நிதியியல் குழுமத்திற்குள் உள்ள கம்பனிகளுக்கிடையில் நேரடி மற்றும் மறைமுக வடிவிலான கோரல்கள் மூலம் மேற்கொள்ள முடியும். அத்துடன் இவை பலவகைப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மூலம் உருவாக்கப்படலாம். அ) ஒன்று மற்றொன்றின் பங்குகளை வைத்திருத்தல் ஆ) ஒரு குழுக்கம்பனி அல்லது இன்னொன்றின் சார்பாக மற்றொரு குழுக்கம்பனியுடன் வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்ளல் இ) குழுமத்திற்கிடையிலான குறுங்கால திரவத்தன்மைக்கான மத்திய முகாமைத்துவம் ஈ) குழுவில் உள்ள மத்திய கம்பனிக்கு வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட உத்தரவாதங்கள், கடன்கள் மற்றும் உறுதியளிப்புக்கள் உ) முகாமைத்துவம் மற்றும் ஏனைய சேவை ஒழுங்குகளின் ஏற்பாடுகள் (ஊ) பின்தளக் காரியாலயச் செயற்பாடுகள் ஊ) பிரதான பங்குதாரர்களுக்கான வெளிப்படுத்துகைகள் (கடன்கள் மற்றும் உறுதியளிப்புக்கள் மற்றும் உத்தரவாதங்கள் போன்ற ஐந்தொகைக்கு உள்ளடங்காத வெளிப்படுத்துகைகள்) எ) ஏனைய குழுக்கம்பனிகளுடன் மேற்கொள்ளும் சொத்துகளுடைய பேணல்களூடாக எழும் வெளிப்படுத்துகைகள் ஏ) ஏனைய குழுக்கம்பனியினுடன் மேற்கொள்ளும் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் விற்பனை மற்றும் ஐ) மீள்காப்புறுதியூடாக இடர்நேர்வுகளை மாற்றல் செய்தல் ஒ) மூன்றாம் தரப்பினருடன் தொடர்புடைய இடர்நேர்வு வெளிப்படுத்துகைகள் மாற்றம் செய்வதற்கு குழுமத்திலுள்ள நிறுவனங்களுக்கிடையில் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள்.

  i) பணிப்பாளர்கள் ii) குழுவினுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் குழுக்கம்பனிகளுக்கு சலுகை அளித்தல் iii) குழுவிற்கிடையில் உள்ள கம்பனிகளிடமிருந்து சேவைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றுக்காக பெருந்தொகைகளை கட்டணமாக செலுத்துதல் iv) குழுவிற்கிடையில் உள்ள நிதியியல் வியாபார செயற்பாடுகளின் வேறுபட்ட துறைகளுக்கு ஒரே ஆளணியினரை ஈடுபடுத்தல் v) பிடிப்பு மற்றும் துணைக்கம்பனிகளுக்கிடையில் அல்லது குழுவில் உள்ள இரு கம்பனிகளுக்கிடையில் இரகசியத் தன்மை வாய்ந்த அல்லது குழுவிற்கிடையில் உள்ள வேறுபட்ட கம்பனிக்கிடையில் ஏனைய வகையில் உணர்திறன்மிக்க தகவல்கள் போன்றவற்றின் தகவல்பாய்ச்சல் (உள்ளக தடைகளின் போதாமை அல்லது சீனப்பெரும் சுவர்) மற்றும் அறிக்கையிடும் வழிகள் என்பவற்றின் ஊடாக குழுமத்தில் உள்ள நிறுவனங்களுக்கிடையில் நலன்களின் முரண்தன்மை உருவாக குழுவிற்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் காரணமாக அமைகின்றன.

- **நவீன கூட்டிணைப்பு ஆளுகை கொள்கைகளின் பலவீனமான பிரயோகம்.** 2002இல் மத்திய வங்கியால் வங்கிகளுக்காக விறியோகிக்கப்பட்ட ஒரு சுய விருப்பில் அமுல்படுத்தும் கூட்டிணைப்பு ஆளுகையின் நியதிகளே தற்போது காணப்படுகின்றன. மேலும் மத்திய வங்கியானது பங்குகளின் உரிமையாண்மை மற்றும் வங்கிப் பணிப்பாளர்கள், அவர்களுடன் தொடர்பானவர்கள் மற்றும் பணிப்பாளர்களால் குறிப்பிடத்தக்களவு நலன்களை கொண்டுள்ள

**சிறப்புக் குறிப்பு 14 (தொடர்ச்சி)**

## நிதியியல் குழுமங்களின் கண்காணிப்பு



நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்முற்பணங்கள் என்பன தொடர்பான கூட்டிணைப்பு ஆளுகையுடன் தொடர்புறும் சில விடயங்கள் தொடர்பில் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் முன்னெச்சரிக்கைத் தேவைப்பாடுகளை விநியோகித்துள்ளது. அது தவிர, 2007 ஏப்பிறல் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடும் விதிகளாக ஒரு சில கூட்டிணைப்பு ஆளுகை விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை 2008 ஏப்பிறல் தொடக்கம் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாக வரவுள்ளது. இலங்கையில் கூட்டிணைப்பு துறையினுடைய ஆளுகைகள் தொடர்பில் பலவீனமான கூட்டிணைப்பு ஆளுகை ஓர் பொதுவான விடயமாக காணப்படுகிறது, அத்துடன் ஏனைய பல நாடுகளில் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் சுயவிருப்பிலான நியதிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

- ஒழுங்குபடுத்தல் மத்தியத்திலிருந்து நன்மையை பெற்றுக் கொள்வதற்காக நிதியியல் மற்றும் நிதிசாரா வியாபரங்களில் கம்பனிகளை அல்லது நிறுவனங்களை உருவாக்குதல்.
- குழு மற்றும் குழுவில் உள்ள தனிப்பட்ட கம்பனிகள் கூட்டாக குழுக்கம்பனிகளுக்கான வெளிப்படுத்துகைகள் தொடர்பிலான நிதியியல் தகவல்களுடைய வெளிப்படுத்தல்களின் போதாத தன்மை.

**பல்தரப்பட்ட ஒழுங்குபடுத்துநர்களினுடைய இணைந்த அணுகுமுறை**

ஏனைய சில நாடுகளில் காணப்படும் ஒற்றை ஒழுங்குபடுத்தல் முறைமைக்கு மாறாக ஏனைய பல நாடுகளில் காணப்படுவதைப் போல இலங்கையும் பல்தரப்பட்ட ஒழுங்குபடுத்தல் முறைமையினை கொண்டுள்ளது.

- மத்திய வங்கியானது வங்கிகள், நிதிக்கம்பனிகள், குத்தகை கம்பனிகள் மற்றும் அரச பிணைகளின் முதன்மை வணிகர்களை ஒழுங்குபடுத்துகின்றது.
- பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, பிணைய நிறுவனங்கள் (அனுமதியளிக்கப்பட்ட பங்கு பரிவர்த்தனை, பங்குச்சந்தை தரகர்கள் மற்றும் கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள்), பட்டியலிடப்பட்ட பிணையங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளை ஒழுங்குபடுத்துகிறது.
- இலங்கை காப்புறுதிச்சபை காப்புறுதி கம்பனிகளை ஒழுங்குபடுத்துகிறது.
- கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி மாகாண ஆணையாளர்கள், கூட்டுறவு சபைகள் மற்றும் சிக்கன கடன் சபைகளை ஒழுங்குபடுத்துகின்றனர்.
- மேலும் நுகர்வோர் விவகார அதிகார சபை, கம்பனிப்பதிவாளர் மற்றும் இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமன கண்காணிப்புக் குழு என்பனவும் அவர்களின் சட்டங்களின் பிரகாரம் குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தல் அதிகாரங்களை கொண்டுள்ளனர்.

வியாபார/ முதலீட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் சட்டம் அல்லது சமூக சேவைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து வைத்திருந்த போதும் நுண்-நிதி வியாபாரங்களில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுக்கு குறிப்பிட்ட ஒழுங்குபடுத்துநர்கள் எவரும் இல்லை.

எப்படியாயினும் சில நாடுகள் ஏற்கனவே ஒற்றை ஒழுங்குபடுத்தல் முறைமையினை உருவாக்கியுள்ளன. 77 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை உள்ளடக்கிய உலகவங்கியின் ஓர் அறிக்கையின் பிரகாரம் 22 (அல்லது 28 %) நாடுகள் ஒற்றை ஒழுங்குபடுத்துநர்களைக் கொண்டுள்ளது. அதேநேரம் மீதி (72 %) நாடுகள் பல்வகை ஒழுங்குபடுத்தல் முறைமையைக் கொண்டுள்ளது. ஒற்றை ஒழுங்குபடுத்துநர்களைக் கொண்டுள்ள நாடுகளில் சிங்கப்பூர், கொரியா, யப்பான், சேர்மனி, சுவீடன், ஆஸ்திரியா, டென்மார்க், அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து என்பன உள்ளடங்குகின்றன. ஐக்கிய அமெரிக்கா இராச்சியம், இந்தியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனிசியா, கொங்கொங் மற்றும் பிரான்ஸ் என்பன பல்வகை ஒழுங்குபடுத்துனர்களை கொண்ட நாடுகளில் சிலவாகும்.

இணை நிறுவன மேற்பார்வையை ஊக்கப்படுத்துதல் மற்றும் நிதியியல் குழுமங்களினுடைய முறைமைசார் இடர்களை கண்காணிக்கும் நோக்கத்துக்காக பல்வகை ஒழுங்குபடுத்துநர் முறைமையினுடைய காரிய மாற்றக்கூடிய தீர்வாக 2005 ஒத்தோபரில மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்துநர்களை கொண்ட ஓர் வேலைக்குழு உருவாக்கப்பட்டது. மேற்பார்வை விவகாரங்களை விபரிக்கும் பொருட்டு இயங்கும் குழு பின்வருவன தொடர்பில் விதந்துரைப்புக்களை மேற்கொண்டுள்ளது. (i) ஒழுங்குபடுத்துனர்களுக்கிடையில் மேற்பார்வை தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான கட்டமைப்பு, (ii) இரண்டு அல்லது அதிக நிறுவனங்களின் இடர்நேர்வுகளுக்கெதிரான பாதுகாப்பாக ஒரே மூலதனம் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்படுகின்ற இரட்டை அல்லது பல்வகை அதிகரிப்புகளை தடுப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கான மூலதனத் தேவைப்பாடுகளின் பிரயோகத்துக்கான கட்டமைப்பு. (iii) அனைத்து நிறுவனங்களினதும் பணிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கான தகுதி மற்றும் பொருத்தமான தன்மை தொடர்பான கொள்கைகளுக்கானன கட்டமைப்பு iv) நவீன கூட்டிணைப்பு ஆளுகை கொள்கைகளின் அறிமுகம் மற்றும் v) வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடைய அறிமுகம்.

இத்துடன், இணைக்கம்பனிகளின் மேற்பார்வை செயற்பாடுகளுக்கு உதவும் பொருத்தமான கொள்கை தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கியினால் ஆளுனரை தலைவராகவும் ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தலைவர்களை அங்கத்தவர்களாகவும் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவானது (உள்ளக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் சபை) 2007 சனவரியில் நியமிக்கப்பட்டுள்ளது.



எடுத்துக் காட்டுகின்றது. வீடமைப்பு மற்றும் நிர்மாணம், ஊர்திகள் மற்றும் நுகர்வு போன்றவற்றிற்காக நிதியியல் நிறுவனங்களால் வழங்கப்படும் கொடுகடன்கள் பெருமளவு உயர்வடைந்து காணப்படுவதனை மேற்பார்வை செய்ய வேண்டியதுள்ளதுடன் குறிப்பிட்ட கொடுகடன்களுக்கான மூலதனப் பாதுகாப்புக்கள் அல்லது வேகமாக விரைந்து வளர்ச்சியடையும் கொடுகடன் வகைகளுக்கான ஏற்பாடுகளை அதிகரித்தல் ஆகிய இடர்நேர்வினை குறைக்கக்கூடிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தல் வேண்டும்.

**தடங்கலின்றி வியாபாரம் தொடரும் ஆற்றலை உயர்த்தி தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை குறைக்கும் பொருட்டு மத்திய வங்கி லங்கா செட்டில் முறைமைக்கான வியாபார தொடர்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது.** வியாபார தொடர்ச்சித்திட்டமானது நீடித்துச் செல்லக்கூடிய தடங்கல்களை எதிர்கொள்ளக்கூடிய முழுமையான வசதிகொண்ட அனர்த்த மீளமைப்பு தலம் ஒன்றை உள்ளடக்குகின்றது. லங்கா செட்டில் மற்றும் லங்கா கிளியர் முறைமைகளின் பங்குபற்றுனர்கள் செயற்றிறன் வாய்ந்த வியாபார தொடர்ச்சித் திட்டங்களை கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு 2006இல் மத்திய வங்கி லங்கா செட்டில் உடனான கலந்தாலோசிப்பின் பின்னர் வியாபார தொடர்ச்சித்திட்டத்தின் ஆகக் குறைந்த நியமங்களை குறிப்பிட்டு நிதியியல் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியது.

**மேற்பார்வை முறைமை வலுவாக்கப்பட்டதுடன் நிதியியல் முறைமையினை அபிவிருத்தி செய்து அதனுடைய தாக்குப்பிடிக்கும் திறனை உயர்த்துவதற்காக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.** மேற்பார்வைக் கட்டமைப்பிற்கான முக்கிய மேம்பாடாக 2008 இல் பாசல் II இன் பின்பற்றப்படவுள்ளமை காணப்படுகின்றது. பாசல் II ஆனது இடர்நேர்வுக்கேற்ற வங்கியினுடைய மூலதனத்தைச் சீராக்கல், இடர்நேர்வு

முகாமைத்துவத்தை மேம்படுத்தல், சந்தை ஒழுக்கத்தை ஒழுக்கத்தை அதிகரித்தல் என்பவற்றிற்கு வழிவகுக்கும். ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை அமைக்கும்படி வங்கிகள் தேவைப்படுத்தப்படும். அத்துடன் எதிர்பாரா அதிர்ச்சிகளிற்குக் எதிரான அவர்களுடைய தாங்குதிறனை அளவீட்டுக் கொள்வதற்காக அழுத்த பரீட்சிப்புக்களை மேற்கொள்ள ஆரம்பிக்கும் படியும், சீர்திருத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் படியும் தேவைப்படுத்தபடலாம். சந்தை பங்கேற்பாளர்களுக்கு அதிகளவு தகவல்களை வழங்குவதற்கும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை விருத்தி செய்வதற்குமென வங்கிகளுடைய நிதியியல் கூற்றுக்களை பிரசுரிப்பதற்கான திருத்தம் செய்யப்பட்ட வடிவமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படும். பன்னாட்டு கணக்கியல் நியமங்களான 32, 39 மற்றும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமம் 7 போன்ற பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் நியமங்களை பின்பற்றுவதனை மத்திய வங்கி ஊக்குவிக்கும். நிதியியல் குழுமங்களால் ஏற்படுத்தப்படக்கூடிய உள்ளார்ந்த முறைமைசார் இடர்நேர்வுகளை கருத்தில் கொண்டு மத்திய வங்கி ஏனைய ஒழுங்குமுறைப்படுத்த நர்களுடன் இணைந்து நிதியியல் குழுமங்களின் முறைசார் இடைநேர்வுகளை கண்காணித்து, ஒருங்கிணைந்த மேற்பார்வையை ஊக்குவித்தல், மற்றும் ஒருங்கிணைந்த மேற்பார்வை செயன்முறையை இலகுபடுத்துவதற்காக பொருத்தமான கொள்கை தீர்மானங்களை எடுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களுக் கிடையேயான சபை மற்றும் தொழிற்பாட்டுக்குழுவொன்று நிறுவப்பட்டது. மேலும், பாரிய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் ஏனைய வசதிகளிலிருந்து எழக்கூடிய வங்கிகளினது கொடுகடன் ஒரு சாராருக்கு அதிகரித்துக்காணப்படுவதனால் ஏற்படக்கூடிய இடர்நேர்வினைக் குறைப்பதனையும் வங்கிகளினது இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேலும் ஊக்குவிப்பதனையும் நோக்காகக் கொண்டு உரிமம் பெற்ற வங்கிகளின் தனியொருவருக்கான கடன்பாட்டு எல்லை மீதான அதன் முன்மதிகரமான தேவைப்பாடுகளை மத்திய வங்கி திருத்தியமைத்தது.

**ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய இரு பெரும் இளைப்பாற்று நிதியங்களுடைய இடர்நேர்வு மட்டங்கள் தாழ்வாகக் காணப்பட்டமைக்கு போதுமான திரவத்தன்மை மட்டங்கள் மற்றும் சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வு மட்டங்கள் என்பன காரணமாக விளங்கின.** ஊழியர் சேமலாப நிதியத்தின் பெரும்பாலான முதலீடுகள் சந்தைப்படுத்தக் கூடிய அரசாங்க பிணையங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் ஊழியர் சேமலாப நிதியமானது வட்டிவீத இடர்நேர்வுகளை குறைத்துக் கொள்ளக்கூடியதாகவிருந்தது. நிதியத்தின் பெறுகைகள் அதன் காசுப்பாய்ச்சல்களைக் காட்டிலும் அதிகமாக காணப்பட்டமையினால் 2006 இல் ஊழியர் சேமலாப நிதியம் திரவத்தன்மை இடர்நேர்வை எதிர்நோக்கவில்லை. ஏறக்குறைய எல்லா நிதிகளும் அரசாங்க பிணைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தமையினால் ஊழியர் சேமலாப நிதியத்தின் கொடுகடன் இடர்நேர்வு மிகக் குறைவானதாகவிருந்தது. புதிய தகவல் தொழில்நுட்ப முறைமையொன்று நிறுவப்பட்டமையானது தனியொரு தரவு உள்ளீடு நுழைவிற்கு வசதியளித்து மற்றும் கணக்கீட்டு மற்றும் முதலீட்டு செய்முறையினை ஒழுங்குபடுத்தல் என்பவற்றின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை குறைத்துக் கொள்ளக் கூடியதாகவிருந்தது.

**நிதியியல் முறைமைக்கு ஆதரவளிக்கும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பைப் பலப்படுத்தும் ஏனைய பல சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** இவை செயற்படாக் கடன்களுக்கு விரைந்து தீர்வு காண இயலச் செய்யும் சொத்து முகாமைத்துவக் கம்பனிச்சட்டம், நலிவுற்ற வங்கிகளுடைய கடன் மீள்பெறுகை செயன்முறையை துரிதப்படுத்தல் மற்றும் கடன் கொடுநருக்கு சார்பான சூழலொன்றை உருவாக்கல் என்பவற்றிற்கான கடன் அறவிடல் சட்டம், கொடுகடன் தகவல் பணியகத்தின் செயற்பாட்டு எல்லைகளை விரிவுபடுத்துவதற்கான கொடுகடன் தகவல் பணியகச் சட்டம் மற்றும் கணனி மோசடிகளினூடாக எழக்கூடிய உள்ளார்ந்த இடர்நேர்வுகளை குறைக்கும் பொருட்டான கணனி குற்றவியல் சட்டம் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.